ரெனியா ஸ்பீகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹோலோகாஸ்ட் நாள்குறிப்புகள்

ஸ்மித்ஸோனியன் (Smithsonian) இதழ் நவம்பர் 2018

பதிப்பாசிரியர்களிடமிருந்து :

இரண்டாம் உலகப்போர்ச் சூழலில் வாழ்ந்த யூத இளம்பெண்ணான ரெனியா ஸ்பீகளின் நெகிழ்வூட்டும் தன் வரலாற்றுக் குறிப்புகள் போலிஷ் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.ரெனியா ஸ்பீகளின் பின்கதையை அறிய ராபின் ஷுல்மன் எழுதிய " இந்த வியக்கத்தகு நாட்குறிப்பேடு அமெரிக்காவில் புத்துயிர்ப்பு பெற்றது எவ்வாறு"? என்னும் நூலைப் படிக்குமாறு அழைப்பு விடுக்கிறோம். நாட்குறிப்புகளின் நடுவே பதிப்பகத்தாரரின் அச்சூழல் சார்ந்த (இரண்டாம் உலகப்போரில் போலந்து எவ்வாறு பாதிப்பு அடைந்தது, மேலும் நாஜிகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சோவியத் வரை எவ்வாறு தாக்குதல் தொடுத்தனர், ஃப்ருசெமிஷோள் (ரெனியா வாழ்ந்து மடிந்த) போன்ற நகரங்களில் யூத மக்களை எவ்வாறு நாடுகடத்தினர், சிறைப்படுத்தினர் போன்ற) வரலாற்றுக் குறிப்புகளையும் இணைத்துள்ளோம்.

ரெனியா ஸ்பீகளின் நாட்குறிப்பு

ஜனவரி 31, 1939

நாட்குறிப்பு எழுத வேண்டும் என்னும் உந்துதல் இன்று ஏன் எனக்கு ஏற்பட்டது? ஏதாவது முக்கியமான சம்பவம் நடந்ததா?, என் தோழிகள் அவர்களுக்கென பிரத்தியேக நாட்குறிப்பு வைத்துள்ளதை நான் அறிந்துகொண்டேனா? இல்லை. எனக்கென ஓர் உரையாடலைத் தொடங்க ஒரு தோழமை வேண்டும். இந்த நாட்குறிப்புடன் என் அன்றாட வருத்தங்களையும் மகிழ்ச்சிகளையும் பகிர்ந்துகொள்வேன். இந்த நாட்குறிப்பு என் நம்பிக்கைக்கு உரியது; என் சிந்தனைகளை அது கேள்வி கேட்காது; நான் சொல்வதை நம்பும்; என் உணர்வுகளை அது பிரதிபலிக்கும்; அதற்கும் மேலாக என் ஆழ்மன ரகசியங்களை அது வெளியே தெரிவிக்காது. அவ்வாறான தோழமையுடன் எந்த மானுடராலும் இயங்க இயலாது.

என் நாட்குறிப்பே, இன்று நம் நட்பு என்னும் நெருங்கிய பந்தம் தொடங்குகிறது. எத்தனை காலத்திற்கு இந்த நட்பு நிலைபெற்றிருக்குமோ, யாருக்குத் தெரியும்? ஒருவேளை என் வாழ்நாள் உள்ளவரை நீயும் உயிர்ப்புடன் இருப்பாய். எவ்வாறாயினும், நான் உன்னிடம் நேர்மையாக நடந்துகொள்வேன் என உறுதியளிக்கிறேன். அதேபோல நீயும் என் எண்ணங்களையும் ஆதங்கங்களையும் கவனமாகக் கேட்க வேண்டும்; வசீகரிக்கத்தக்க ஓர் அரண்மனையில், மிளிரும் தன்மை கொண்ட கவர்ச்சிமிகு திறவுகோலால் உரிய பாதுகாப்புடன் பூட்டி வைக்கப்பட்டிருக்கும் விசேஷமான ஒரு புத்தகத்தைப் போல நீ அமைதியாக இருத்தல் வேண்டும். நீ என்னை ஏமாற்றமாட்டாய் என எனக்குத் தெரியும்.

முதலில் என்னை நான் அறிமுகம் செய்துகொள்கிறேன்.மரியா கனொப்னீட்ஸ்கா (Maria Konopnicka) பெண்கள் நடுநிலைப்பள்ளியில் நான் படிக்கிறேன். என் பெயர் ரெனியா, என் தோழிகள் என்னை அவ்வாறு தான் அழைப்பர். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவள் பெயர் அரியானா. ஒரு திரைத்துறை நடிகையாக வேண்டும் என்று அவள் இந்த வயதிலேயே மனவுறுதி செய்துகொண்டாள். ஏற்கனவே சில படங்களில் நடித்திருக்கிறாள்.

என் தாயார் வார்ஸாவில் (Warsaw) வாழ்கிறாள். நீஸ்ட்டர் (Dniester) நதியோரம் அமைந்திருந்த எழில்மிகு பண்ணை வீட்டில் நான் வாழ்ந்திருந்தேன். நான் மிகவும் விரும்பிய வசிப்பிடம் அது. நதி

ஓரத்தில் அமைந்திருந்த எலுமிச்சை மரங்களின் அருகே நாரைகள் நிற்கும் காட்சி என் கண்களை விட்டு இன்னும் அகலவில்லை. பழத்தோட்டத்தில் மினுக்கும் ஆப்பிள் பழங்களைப் பறிக்க நாங்கள் போட்டி போடுவோம். என் தோட்டத்தைத் தூய்மையாகப் பராமரித்திருந்தேன். வசீகரமான மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலையின் அழகில் நான் மிதந்திருந்தேன். அந்த வாழ்க்கைக்கு இனி திரும்ப இயலாது. பண்ணை வீடு, நாரைகள், ஆப்பிள்கள் மற்றும் மலர்கள் இனி இல்லை. மிச்சமிருப்பவை யாவும் இனிமையான மலரும் நினைவுகள் தான். ஓய்வறியாது ஓடிக்கொண்டிருக்கும் விசித்திரமான இந்தக் குளிர்ந்த நீஸ்ட்டர் நதி, இனி எனக்கானது அல்ல. தற்போது நான் ஃபுசெமிஷோள் (Przemyśl) நகரத்தில் (போலந்து நாட்டில்) என் பாட்டி வீட்டில் வாழ்கிறேன். உண்மை யாதெனில், இன்று எனக்கான இல்லம் எதுவும் இல்லை எனச் சொல்லலாம். அதனால் தான், சிலசமயம் நான் வேதனைப் பட்டு அழுகிறேன். என் தாயாரைப் பிரிந்து தவிக்கிறேன். அவளின் கனிவான உள்ளம் என்னை நெகிழச் செய்கிறது. நாங்கள் அனைவரும் சேர்ந்து வாழ்ந்த வீட்டையும் இழந்து வாடுகிறேன்.

மீண்டும் அழச் சொல்லி என் உள்ளம் அழைக்கிறது

எலுமிச்சை மரங்கள், எழில்மிகு இல்லம், நாரைகள், பட்டாம்பூச்சிகளுடனான என் நாட்கள் இவற்றை எண்ணி அசைபோடுகிறேன்

என் கண்களிலிருந்து வெகு தூரத்தில்..எங்கோ..

நான் இழந்ததைப் பார்க்கிறேன், செவிமடுக்கிறேன்

வயது முதிர்ந்த மரங்களைத் தாலாட்டும் காற்று, இந்த அனுபவங்களை இழக்கிறேன்

பனியைப் பற்றியோ அமைதி ததும்பும் அந்தச் சூழல் பற்றியோ இனி சொல்ல யாரும் இல்லை

வீட்டிலிருந்து சற்று தூரத்தில், இருளில், வாசற்கதவின் வெளியில் ஒலிக்கும் அந்தத் தாலாட்டு எனக்கு இன்னமும் கேட்கிறது

அருமையான எங்கள் வீட்டையும், அருகில் அமைந்திருந்த குளத்தையும்,

வானுயர வளர்ந்திருந்த எலுமிச்சை மரங்களையும் இன்னமும் பார்க்கிறேன்.

ஆனால் மகிழ்ச்சியான கணங்களும் என் வாழ்வில் இல்லாமல் இல்லை. களிப்பூட்டும் தருணங்களும் எண்ணற்றவை என்று சொல்லலாம். என் தோழிகளை உனக்கு அறிமுகம் செய்கிறேன். என் நெருங்கிய தோழி நோரா. அவள் என் அருகில் தான் அமர்வாள். எங்களின் ஒத்திசைவான எண்ணங்களையும் கருத்தோட்டங்களையும் நாங்கள் பகிர்ந்துகொள்வோம். எங்கள் பள்ளியில், சிறுமிகளாகிய நாங்கள் ஆசிரியர்களிடம் ஒரு விதமான காதலில் நித்தம் ஈடுபடுவோம். எனக்கும் நோராவிற்கும் லத்தீன் ஆசிரியை திருமதி வலேரியா மீது மெய்யான பற்றுதல் அல்லது காதல் இருந்தது (சில சிறுமிகள் வெறுமனே மேலோட்டமாக, பெயர் வாங்குவதற்காகக் குழைவார்கள்). ஆசிரியை வலேரியாவை நாங்கள் ப்ரஹ்லா என்று தான் அழைப்போம். திருமதி ப்ரஹ்லா லோவோஃப் (Lwow) என்னும் ஊரில் வசிக்கும் ஓர் அழகான வனப்பு மிக்க அதிகாரியின் மனைவியாவாள். மாதமிரு முறை ஞாயிற்றுக்கிழமைகளில் எங்கள் ஆசிரியை தம் கணவனைக் காணச் சென்றுவிடுவாள். ஆசிரியையின் கணவர் வசிப்பிடம் தொடர்பான முகவரியைக் கண்டறிய முயன்றோம்; அரசாங்க அலுவலகத்தில் கூட விசாரித்தோம். ஆனால் அவரின் முழுப்பெயர் எங்களுக்குத் தெரியாததால் இயலவில்லை. நாங்கள் அவருக்கு "ஜொலிப்பவர்" என்று பட்ட பெயரிட்டு அழைத்துக்கொள்வோம். விசுப்பலகையில் அடுத்து அமர்ந்திருப்பவள் பெல்கா. அவள் குட்டையாக தடித்துக் காணப்பட்டாள்; பேய்களைப்போன்ற உடலமைப்பு கொண்டவள். அவள் கல்வியில் மிகவும் சிறந்து விளங்குபவள். பொதுவாக எங்கள் யாருக்கும் அவளைப் பிடிக்காது.

அடுத்து இர்காவைப் பற்றிச் சொல்லவேண்டும். அவளை எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்காது. இதற்கு முக்கியக்காரணம் என் தாயார். இர்காவின் தாயாரை என் அம்மாவிற்குப் பிடிக்காது. அவர்கள் இருவரும் நடுநிலைப் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள். இர்கா என்னை மட்டமாகப் பேசத் தொடங்கியதும், என் அம்மா அவள் தாயாரை வெறுத்ததை விட நான் இர்காவை அதிகம் வெறுக்க ஆரம்பித்தேன். போலித்தனமான, எரிச்சலூட்டும் இனிப்பு மிக்க வார்த்தை ஜாலம் கொண்டவளாக அவள் இருப்பதால் மனதார அவளை வெறுக்கப் பழகிக்கொண்டேன்.

நானும் நோராவும் ஒரு மாதமாக விருந்து ஒன்றிக்குத் திட்டமிட்டோம். பல சச்சரவுக்கு இடையில் இந்தச் சனிக்கிழமை விருந்து உறுதியாயிற்று.

5 பிப்ரவரி 1939

நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால் ஆசிரியை ப்ரஹலாவிற்கு இந்த விருந்து இனிய பொழுதாக அமைந்தது. என் அம்மா இங்கிருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். இர்காவின் தாயார் என் ஆசிரியையிடம் தம் பெண்ணின் வருங்கால நலனைக் கருத்தில் கொண்டு குழைந்துகொண்டிருந்தாள். என் அன்பிற்குரிய நாட்குறிப்பே, இந்த விருந்திற்கான ஏற்பாட்டை மனமுவந்து செய்தேன், ஆனால் விருந்து நிறைவுறும்போது மனதில் மகிழ்ச்சி இல்லை. நான் என்ன எதிர்பார்த்துவிட்டேன், ஏன் எனக்கு ஏமாற்றம் மிஞ்சியது? எனக்குத் தெரியவில்லை? ஆசிரியை மிக அன்புடன் தான் நடந்துகொண்டாள். எனக்குத் தான் திருப்தி இல்லை.

11 பிப்ரவரி 1939

இன்று ஒரே மழை. மழை நாட்களில், ஜன்னலுக்கு அருகில் நின்றுகொண்டு கம்பிகளில் பட்டுச் சிதறும் நீர்த்துளிகளை எண்ணி மகிழ்வது என் வழக்கம். இந்த மழைத்துளிகள் ஈரமான சாலையை மேலும் ஈரமாக்கத் துடிக்கின்றன. அழுக்கு படிந்த சாலையை மேலும் அவலட்சணமாகக் காட்ட இந்த நீர்த்துளிகள் அலைகின்றன. ஏற்கனவே மோசமாக இருந்த இந்த நாளை மேலும் சலிப்பூட்ட இந்த மழை தொடர்ந்து பொழிந்து சாலை சேறும் சகதியுமாகிவிட்டது. மனிதர்கள் என்னைக் கண்டு எள்ளி நகையாடுகிறார்கள்; சிலசமயங்களில், அசையாத பொருட்கள் என்னிடம் உரையாடுகின்றன என எனக்குத் தோன்றும். மனிதர்களைப் போல அவைகளுக்கும் ஆத்மா இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். எனக்கு, வடிகால் குழாயில் வழியும் நீர் அவ்வப்போது பல்லைக் காட்டி இளிப்பதாகத் தோன்றும். பிறருக்கு அவ்வாறு தோன்றவில்லை என்பது என் பிழையா?

"பொலிவான சினிமா பத்திரிக்கையின் ஒரு பக்கம் என்னிடம் முறையிட்டது. முந்தைய நாள் தான் என்னை விலை கொடுத்து வாங்கினார்கள். அதற்குள் இப்போது குப்பைத்தொட்டிக்குள் வந்துவிட்டேன்". முடியவே முடியாது!

ஆயினும் இந்த உலகத்தில், உனக்குப் பொன்னான தருணம் கொஞ்சமாவது கிடைக்கப்பெற்றது. தெருக்களில் கத்திக்கொண்டு நான் ஓடியபோது, கடைகளில், பத்திரிக்கையில் பிணைந்திருக்கும் நீ சற்று அமைதியான வாழ்க்கையை அனுபவித்தாய்.

அன்றாட நாட்கள் வெகு விரைவாகச் செல்லும் என் வாழ்க்கையை விட உன்னைப்போல ஒரு பத்திரிக்கை பக்கமாகக் கூட இருந்திருக்கலாம்.

மார்ச் 15, 1939 (பதிப்பகத்தார்)

ஜெர்மானிய துருப்புகள் செக்கோஸ்லோவாக்கியா மீது படையெடுத்ததன் மூலம் பிரிட்டனின் சமாதானப்படுத்தும் முயற்சி தோல்வி அடைந்ததை அறியலாம்.

மார்ச் 28, 1939

கடவுளே, நான் மிகச் சோகமாக உணர்கிறேன். என் அம்மா தற்போது என்னை விட்டுச் சென்றாள். என் தாயாரை மீண்டும் எப்போது சந்திப்பேன், யாருக்குத் தெரியும்? நோராவுடன் சில நாட்கள் ஊர் சுற்றினேன். அடுத்து என் தோழி இர்காவுடன் கொஞ்சம் சுற்றலாம், ஆனாலும் பிரயோஜனம் இல்லை. அன்னையைத் தான் மனம் தேடுகிறது. நினைவுகளை வைத்துத் தான் காலத்தை ஓட்டுகிறேன். தற்போது நினைத்தால் கூட தலை கணக்கச் செய்யும் நினைவுகள் தாம். வேறு என்ன செய்வது, அவை என் மிகச் சிறந்த தருணங்கள் ஆயிற்றே. வசந்த காலம் தொடங்கி விட்டது. என் ஊர் தற்போது களைகட்டும்; பறவைகளின் பாடல்கள் ரீங்காரமிடும். பூக்கள் பூத்துக்குலுங்கும். வானத்தின் கருணையில் புவி நிறையும். எங்கும் இதயங்களின் மகிழ்ச்சி பரவியிருக்கும். தம் விடுமுறை நாட்களைப் பற்றி மக்கள் இந்நேரம் சிந்திக்கத் தொடங்கியிருப்பர். நான் விரும்பிய அமைதி ததும்பும் நட்பானதொரு சூழல்.

செடார் பண்டிகையின் (எகிப்திலிருந்து யூதர்கள் வெளியேறியதை நினைவு கூறும் நாள்; விருந்தின் போது தட்டில் ஆறுவகை உணவும் பரிமாறப்படும்) இரவில் நான் முதிர்ந்த எலிஜாவிற்காக (கிறிஸ்துமஸ் தாத்தாவின் யூதப் பதிப்பு) காத்திருப்பேன். அந்தப் புனிதர், பரவசத்தோடு வாழும் குழந்தைகளான எங்களைப் பார்க்க நேரம் ஒதுக்குவார். வெறுமையை உணரும் இந்தச் சமயத்தில் தான் அவர் என்னைக் காண வரவேண்டும். நினைவுகளைத் தவிர தற்போது வேறு ஒன்றும் மிச்சம் இல்லை. தாத்தாவிற்குச் சுகமில்லை. அம்மா என்னை நினைத்து மிகவும் கவலை கொள்கிறார். நான் மிகுந்த துன்பத்தில் உழல்கிறேன்.

மார்ச் 31, 1939 (பதிப்பகத்தார்)

நாஜிகளின் தாக்குதலிலிருந்து போலந்தின் எல்லைகளைக் காப்போம் என பிரான்ஸும் பிரிட்டனும் வாக்குறுதி அளித்தன.

ஏப்ரல் 2, 1939

தற்போது நான் பிரெஞ்சு மொழி கற்கத் தொடங்கியுள்ளேன். போர் நடவாயிருந்தால் பிரான்ஸ் தேசத்திற்கு ஒருவேளை சென்றிருக்கக்கூடும். நான் அங்கு முன்பே போவதாக இருந்தது. ஹிட்லர் ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லோவாக்கியாவைக் கைப்பற்றி விட்டான். அவனின் அடுத்த இலக்கு என்னவாக இருக்கும் என எவர் அறிவார்? ஒருவகையில் அவன் என் வாழ்வையும் ஒருவிதமான பாதிப்புக்கு உள்ளாக்குகிறான். என் தங்கை அரியானாவிற்காக ஒரு கவிதை எழுத வேண்டும். நன்றாக வந்தால் மிக மகிழ்வேன்.

ஜூன் 18, 1939

இன்று என் பிறந்தநாள். துயரமான அல்லது சோகமாக்கும் எதைப் பற்றியும் நான் சிந்திக்க விரும்பவில்லை. அதனால், இத்தனை ஆண்டுக்கால வாழ்வில் நான் ஆற்றிய பயனுள்ள செயல்களை எண்ணுகிறேன்.

இவ்வாண்டின் பள்ளி இறுதி நாளான நாளையைப் பற்றி நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. எனக்கு எதுவும் பொருட்டில்லை, எதுவுமே.

ஒரு குரல்: ஒன்றுமில்லை

நான்: நான் பாடங்களில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளேன்

குரல்: நீ அதீத உழைப்புடன் செயல்பட்டு மதிப்பெண்களைப் பெறவில்லை. வேறு என்ன?

நான்: வேறு ஒன்றுமில்லை. நிச்சயமாக நான் பிரான்ஸ் தேசத்திற்குச் செல்ல விரும்புகிறேன்.

குரல்: நீ புகழடைய விரும்புகிறாயா?

நான்: நான் புகழடைய விரும்புகிறேன், ஆனால் வாழ்வு அவ்வாறு இராது. நான் மகிழ்ச்சியாக இருக்க மட்டும் திண்ணமாக ஆசைப்படுகிறேன். மேன்மேலும் மகிழ்ச்சியாக.

ஆகஸ்ட் 23, 1939 (பதிப்பகத்தார்)

ரஷ்யாவும் ஜெர்மனியும் பரஸ்பரம் ஒருத்தரை ஒருத்தர் தாக்கிக் கொள்ளக்கூடாது என்னும் மொலோடோவ்-ரிப்பன்ட்ரோப் ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டனர்.

ஆகஸ்ட் 25, 1939

என் கோடை விடுமுறை கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. கிராமத்தில் உள்ள என் அத்தையைப் பார்க்கச் சென்றிருந்தேன். என் அம்மாவைக் காண வார்ஸாவும் போனேன்.இப்போது தான் திரும்பினேன். உனக்கு இது எதுவும் தெரியாது. நீ இங்கேயே உறங்கிவிட்டாய்.

ருஷ்யர்கள் ஜெர்மானியர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டது பற்றியும் உனக்குத் தெரியாது. மக்கள் உணவைச் சேமிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஒவ்வொரு நாளும் எச்சரிக்கையுடன் கழிக்கவேண்டியதாய் இருக்கிறது. போர் எப்பொழுது வேண்டுமானாலும் மூளலாம், அனைவரும் அதை எதிர்நோக்குகிறார்கள். அம்மாவிடமிருந்து விடைபெறும் போது அவளை இன்னமும் நெருக்கி அணைத்தேன்.அந்த மௌனக் கட்டியணைத்தலில் நான் என்னை வெளிப்படுத்த எண்ணினேன். மீண்டும் அம்மாவை எப்போது சந்திப்பேனோ தெரியாது.

செப்டம்பர் 1, 1939 (பதிப்பகத்தார்)

ஜெர்மனி போலந்தை முற்றுகை இட்டது. உலகப்போர் ஐரோப்பாவில் மீண்டும் தொடங்கி விட்டது.

செப்டம்பர் 3, 1939 (பதிப்பகத்தார்)

போலந்திலிருந்து படைகளைத் திருப்பி அழைக்குமாறு பிரான்ஸும் பிரிட்டனும் இறுதி எச்சரிக்கை விடுத்ததை ஜெர்மனி பொருட்படுத்தவில்லை. எனவே, போர் தான் உபாயம் என இறுதியாயிற்று.

செப்டம்பர் 6, 1939

போர் ஆரம்பித்துவிட்டது. ஒரு வாரமாக போலந்து ஜெர்மனியுடன் போரில் ஈடுபட்டு வருகிறது. பிரான்ஸும் பிரிட்டனும் ஹிட்லருடன் போர் என அறிவித்துவிட்டு மூன்று புறத்திலும் தாக்குதல் நடத்துகின்றன. ஆனால் ஹிட்லர் ஒன்றும் செயலற்று இருக்கவில்லை. எதிரிகளின் போர் விமானங்கள் ஃபுசெமிஷோளில் வளம் வருகின்றன. இங்கேயும் அங்கேயும் வான்வழித் தாக்குதலுக்கான அபாயச்சங்கின் ஒலி காதை அடைக்கிறது. கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும், இதுவரை எங்கள் நகரத்தில் எந்தக் குண்டும் வீசப்படவில்லை. செஸ்டஹோவா (Częstochowa), க்ராகவ் (Krakow) , லோவோஃப் போன்ற நகரங்களின் பல பகுதிகள் அழிந்துவிட்டன. ஆனால் நாங்கள் அனைவரும், சிறுமிகள் முதல் சிப்பாய்கள் வரை அயராமல் போர் செய்கிறோம். விமானத் தாக்குதலிலிருந்து தப்பிப் பிழைக்க அகழி வெட்டுவது, விஷ வாயுவின் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ள வாயு முகமூடி தைப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டேன். இவ்வாறாகப் பெண்களுக்கும் ராணுவ பயிற்சி துரிதமாக நடந்தது. வீரர்களுக்காகத் தேநீர் மற்றும் உணவை எடுத்துக்கொண்டு செல்கிறேன். என் நாட்டைக் காக்க போலாந்து வீரர்களுடன் இணைந்து நானும் ஒருவகையில் பங்களிப்பாற்றுகிறேன். நான் சண்டையில் முழுமையாக ஈடுபடுகிறேன், வெல்லுவேன்.

செப்டம்பர் 10, 1939

அட கடவுளே!! தற்போது நாங்கள் மூன்று நாள்களாகச் சாலையில் தான் இருக்கிறோம். ஃபுசெமிஷோள் நகரமும் தாக்கப்பட்டது. நாங்கள் வெளியேறவேண்டியதுதான். என் தங்கை அரியானா, நான் மற்றும் எங்கள் தாத்தா ஆகிய மூவரும் தப்பினோம். எரியூட்டப்பட்ட எங்கள் நகரத்திலிருந்து நடு இரவில் மூட்டை முடிச்சுக்களுடன் கால்நடையாகக் கிளம்பினோம். எங்கள் பாட்டி எங்களுடன் வரவில்லை. அவள் பின்தங்கிவிட்டாள். கடவுளே பாட்டியைக் காப்பாற்று. சாலையில் நாங்கள் செல்லும்போது எங்கள் ஊர் முழுமையாக அழிந்ததாகக் கேள்விப்பட்டோம்.

செப்டம்பர் 17, 1939 (பதிப்பகத்தார்)

ருஷ்யப்படை கிழக்கிலிருந்து போலந்து நாட்டை தாக்கியது.

செப்டம்பர் 18, 1939

கிட்டத்தட்ட ஒரு வாரமாக நாங்கள் லோவோஃப் நகரத்தில் தங்கியுள்ளோம். நகரம் முற்றாகச் சூழப்பட்டுள்ளது. எங்கும் உணவுத்தட்டுப்பாடு தான். நான் சிலசமயங்களில் விடியற்காலையில் எழுந்து சென்று ரொட்டிக்காக நெடுவரிசையில் நிற்கிறேன். மற்றபடி, தோட்டாக்களின் மற்றும் குண்டு மழைகளின் கொடூரச் சத்தத்திற்கிடையில் நாள் முழுவதும் பதுங்கு குழிகளில் தான் செலவிடுவோம். கடவுளே எங்களைக் காப்பாற்று!. சில குண்டுவெடிப்புகள் மக்களின் வசிப்பிடங்களை முழுமையாகத் தகர்த்தன. மூன்று நாட்களுக்குப் பிறகு இடிபாடுகளிலிருந்து சில மனிதர்களை உயிரோடு மீட்டார்கள். சிலர் பதுங்குகுழிகளிலேயே உறங்குகிறார்கள். தைரியமாக இல்லங்களில் உறங்குபவர்கள் இரவில் பலமுறை கண்விழித்து நிலவறைக்கு ஓட வேண்டியிருந்தது. இந்த வாழ்க்கை கோரமானது. கூண்டில் வாழும் இந்த வாழ்வில் தண்ணீர்த் தட்டுப்பாடும், உறக்கமற்ற மனநிலையுடன் சரியான படுக்கையும் அற்று நாங்கள் அவதியுறுகிறோம். ஆனால், என் மனவோட்டங்கள் இதை விட அதிபயங்கரமானதாக இருந்தது. என் பாட்டி ஃபுசெமிஷோள் நகரத்திலேயே தங்கிவிட்டாள். என் தந்தை ஸலஷ்ட்ரிகி (Zaleszczyki) நகரத்தில் இருக்கிறார். என் தாயோ வார்ஸாவில். வார்ஸா நகரமும் கூட எதிரிப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ளது. போலந்து நாட்டவர்கள் விடாமுயற்சியுடன் கடுமையாகப் போராடுகிறார்கள். அங்கு, திறந்தவெளியில் மறவர்களாகிய போலந்து நாட்டவர்கள் இறைவனின் பார்வையில் எதிரிகளுடன் யுத்தம் செய்கிறார்கள். ஆனால் ஜெர்மானியர்களோ அறமற்ற தன்மையுடன் அப்பாவி குடிமக்களின் இல்லங்களில் குண்டுமழை பொழிகிறார்கள், தேவாலயங்களைச் சாம்பலாக்குகிறார்கள். குழந்தைகளை விஷவாயு வைத்துக் கொள்கிறார்கள். நாங்கள் தற்பாதுகாப்பிற்காகப் போராடுகிறோம். வார்ஸா, ஃபுசெமிஷோள் மற்றும் லோவோஃப் நகரங்களை நாங்கள் மீட்டெடுப்போம்.

அம்மா வார்ஸாவில் இருக்கிறாள். என் அன்பிற்குரிய அம்மாதான் உலகிலேயே எனக்கு மிக நெருக்கமான ஆத்மா. அவள் விலைமதிப்பற்றவள். என் வயது பிள்ளைகள் பதுங்குகுழியில் இருப்பதைப் பார்த்தால் நிச்சயமாக அவள் என்னைப் பற்றித் தான் நினைத்துக்கொள்வாள். எங்கள் எண்ணங்கள் ஒருமித்துத்தான் இருக்கும். போற்றுதலுக்கு உரிய என் இறைவனே, என் அன்னையைக் காப்பாற்று. நாங்கள் உயிருடன் இருப்போம் என்னும் ஆழ்ந்த நம்பிக்கையை எங்கள் அன்னைக்கு விதைத்துவிடு. கருணைமிக்க இறைவா, தயவுசெய்து போரை

நிறுத்து. அணைத்து மக்களுக்கும் நல்வழி காட்டி சுபிட்சத்தைக் கொடு. ஆமென்.

செப்டம்பர் 22, 1939 (பதிப்பகத்தார்)

சோவியத் ருஷ்யாவின் படைகள் லோவோஃப் நகரில் நுழைந்தன.

செப்டம்பர் 22, 1939

என் இனிய நாட்குறிப்பே! இன்றைய நாள் எனக்கு வினோதமாக இருந்தது. லோவோஃப் நகரம் சரணடைந்தது. ஆனால் ஜெர்மனியிடம் அல்ல சோவியத்திடம். போலந்து ராணுவ வீரர்கள் நிராயுதபாணியாகத் தெருக்களில் நின்றனர். சிலர் கண்களில் நீர் தளும்பத் தம் ஈட்டிகளைத் தரையில் கிடத்தினர். ரஷ்யர்கள் அவர்களின் துப்பாக்கிகளைப் பிடுங்கி உடைத்ததை வெறுமனே பார்த்துக் கொண்டு நின்றனர். நான் விசனமடைந்தேன். ஆழ்ந்த துக்கம் ஏற்பட்டது. இன்னும் சிலர் அரசாங்க உத்தரவை மீறி லோவோஃப் நகரைப் பாதுகாக்கத் தம் உயிரை விடுவதற்கு நாயகத்தன்மையுடன் போரிட்டனர்.

செப்டம்பர் 28, 1939

ருஷ்யர்கள் நகரத்தினுள் நுழைந்தார்கள். உணவு, உடைகள், காலணிகள் மற்றும் எல்லாமே இன்னமும் தட்டுப்பாடு தான். ஒவ்வொரு கடைக்கும் முன்னே பெரும் வரிசையைக் காண முடிகிறது. குறிப்பாகச் சொல்லவேண்டும் எனில் ருஷ்யர்கள் பொருட்களை வாங்க மிக ஆர்வமாக இருந்தனர். மேலும் அவர்கள், துணிகள், காலணிகள் மற்றும் கைக்கடிகாரங்கள் போன்றவற்றைக் கைப்பற்ற ஒழுங்கமைத்தனர்.

இந்த செஞ்சேனை விசித்திரமானது. அதிகாரிக்கும் சாதாரணச் சிப்பாய்க்கும் உள்ள வேறுபாட்டை அறிவது சிரமம். அவர்கள் அனைவரும் ஒரேமாதிரியான சாம்பல் கலந்த பழுப்புச் சீருடைகளை அணிந்திருந்தனர். என்னால் புரிந்துகொள்ள இயலாத ஒரு மொழியில் உரையாடுகின்றனர். ஒருவருக்கொருவர் "தோழர்" என அழைத்துக் கொள்கின்றனர். ஆயினும், சிலநேரங்களில் அதிகாரிகளின் முகங்களில் அறிவுத்திறன் மேலதிகமாகத் தெரிகிறது. ருஷ்ய மற்றும் ஜெர்மானிய படையினரின் காட்டாற்று வெள்ளம் போன்ற அணிவகுப்பால் போலாந்து மிகவும் திணறுகிறது. எங்கள் ஆட்சியாளர்கள் நாட்டை விட்டுத் தப்பிப் பறந்துவிட்டனர். அவர்களின் மீது நான் மிகுந்த உறுதி கொண்டிருந்தேன்.

செப்டம்பர் 29, 1939 (பதிப்பகத்தார்)

போலந்து அதிபர் இக்காஃப்சி மொஸ்சிஸ்கி (Ignacy Moscicki) ராஜினாமா செய்துவிட்டு, அதிகாரத்தை நாடு கடந்த (தற்போது பாரிஸில் அமைந்த) போலாந்து அரசுக்குக் கொடுத்தார்.

அக்டோபர் 27, 1939

இப்போது நான் ஃபுசெமிஷோள் நகரத்திற்குத் திரும்பிவிட்டேன். அன்றாட நடைமுறை வாழ்க்கை மீண்டும் தொடங்கியது, ஆனால் மிகுந்த மனச்சோர்வுடன் இருக்கிறேன். என் தாயார் இங்கு இல்லை. அவளைப் பற்றி எந்தத் தகவலும் இதுவரை இல்லை. என் தாய் மரித்துவிட்டதாக ஒரு கோரமான கனவு கண்டேன். அதற்கான சாத்தியம் இல்லை என்பதை அறிவேன். எந்நேரமும் நான் அவலத்துடன் காணப்பட்டேன். என் தாயை இன்னும் இரு மாதத்திலோ அல்லது ஒரு வருடத்திலோ கூட காணமுடியும் என்பது திண்ணம். இல்லை, நான் செத்துத் தொலைகிறேன். புனித ஆண்டவரே, எனக்கு விரைவான சுலபமான மரணத்தைக் கொடு.

அக்டோபர் 28, 1939

வெகுஜன மக்கள் ஜோசப் ஸ்டாலினுக்கு வணக்கம் தெரிவிப்பதை அறியும்போது, என் நாட்டுப் பெண்கள் சந்தடியில் ஈடுபட்டார்கள். வணக்கம் வைக்கும் மந்தையில் அவர்கள் இணைய மறுத்துவிட்டனர். அவர்கள் "போலந்து இன்னமும் மரிக்கவில்லை" என்ற ரகசிய வாசகத்தை எழுதுகின்றனர். தங்களுக்குள் பரிமாறிக்கொள்கின்றனர். ஆனால், நேர்மையாகச் சொல்லவேண்டும் எனில் நெடுநாள்களுக்கு முன்பே போலந்து அழிந்து விட்டது என்பது தான் உண்மை. தற்போது அனைவரும் சமம் எனச் சொல்லப்படும் கம்யூனிஸ ஆட்சிக் குடையின் கீழ் நாங்கள் உள்ளோம். "அசிங்கமான யூத இனத்தைச் சேர்ந்தவரே" என எங்களை இனி கூவி அழைக்க முடியாது என்பது அவர்களுக்குக் கசப்பை உருவாக்கும். ஆயினும் அவர்கள் அந்தரங்கமாக எங்களை அவ்வாறு அழைப்பார்கள்.

அந்த ருஷ்யர்கள் நுணுக்கமான அறிவு பெற்றவர்கள் (அனைவரும் எனச் சொல்ல முடியாது). அவர்களில் ஒருவன் என்னை மணமுடிக்க ஆவலாக இருந்தான். பிரான்ஸும் பிரிட்டனும் ஜெர்மனியுடன் போர் புரிகின்றன. ஏதோ நடக்கும் எனத் தோன்றுகிறது. எனினும் எனக்கு இதைப் பற்றி என்ன அக்கறை? என் தாய் எங்களுடன் இணைய வேண்டும். அதன் பிறகு எந்த விசாரணையாயினும் அதன் மூலம்

வரும் எந்த இன்னல்களாயினும் எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

நவம்பர் 1939 (பதிப்பகத்தார்)

ஸ்டாலினின் ஆளுகைக்கு உட்பட்ட லோவோஃப் நகரில் வாழும் யூதர்களின் வேலைகள், பதவிகள் மற்றும் தொழில் புரிவதற்கான உரிமங்கள் முடக்கப்பட்டுவிட்டன.

நவம்பர் 1, 1939

தற்சமயத்தில் ஒரு புதிய கூடுகை (க்ளப்) இங்கு நிறுவப்பட்டுள்ளது. பல இளைஞர்களும் யுவதிகளும் சங்கமிக்கின்றனர். எனக்கு ப்ருஹலா மீதான காதலின் ஈர்ப்பு நீர்த்துவிட்டது. இனி அதற்கான சாத்தியம் இல்லை. நோராவிடம் இறுதியாக இதைத் தெரிவித்தேன். அவளும் அவ்வாறே உணர்வதாகச் சொன்னாள். ஒரு பருவ மாற்றம் ஏற்பட்ட பின், ஒரு யுவதி ஓர் இளைஞனைத் தான் விரும்ப வேண்டும். எனக்கு ஜூரக்கைப் பிடித்திருக்கிறது. அவனுக்கு இதைப் பற்றிய அறிதல் இல்லை, புரிந்து உணரவும் இயலாது.

கூடுகைக்கு முதல் நாள் சென்றிருந்த போது குதூகலமாக உணர்ந்தேன், ஆனால் இன்று ஏனோ அன்னியமாகத் தோன்றியது. மனிதர்கள் காதல் சரச ஆட்டம் விளையாடினர், துரதிருஷ்டவசமாக என் பெயர் ஒருமுறை கூட தேர்வாகவில்லை. உன்னிடம் கூட அதை ஒப்புக்கொள்ள என் உள்ளம் தயங்குகிறது. ஜூலெக் என்னும் ஒரு பையன் (ஜூரக் அல்ல) என்னை விரும்புகிறான் போல. எதனால்? ஒருவேளை என் தோழிகளைப் போல் இல்லாமல் நான் வேறுமாதிரியாக அவனுக்குத் தோன்றி இருக்கலாம். அவ்வாறு நான் இருப்பது நல்லது தானா அல்லது தீயதா எனக் கண்டறிய இயலவில்லை. ஓர் அழகான காமப் பார்வையுடன் புன்னகைக்க எனக்குத் தெரியாது. எனக்கு இயல்பாகத்தான் சிரிக்க வரும். பையன்களுக்கு மத்தியில் பழகவும் தெரியவில்லை. இதனால் தான் நான் கடந்த காலத்தை விரும்புகிறேன். அப்போது என் தாயார் என்னுடன் இருந்தார். என் பூர்வீக வீட்டில் நான் மனமகிழ்ச்சியுடன் அமைதியான வாழ்க்கையில் பயணித்துக் கொண்டிருப்பேன்.



படம்: ஃபுசெமிஷோள் யூதச் சேரி (Ghetto)

1 யூதச் சபையினர் விவாதிக்கும் இடம்

2 சிறை

3 மருத்துவமனை

4 பிரதான நுழைவாயில்

5 யூதர்கள் குழுமும் இடம்

6 தூக்கு மேடை

7 தலைமையகம்

8 தளபதிகளின் மாளிகைகள்

9 பலியிடப்படுபவர்களின் இடுகாடு

பதிப்பகத்தார்: ஜெர்மனியும் சோவியத் ரஷ்யாவும் 1939இல் போலந்து நாட்டை இணைத்துக் கொண்டன. நாஜிகள் போலந்து யூதர்களை நூற்றுக்கணக்கான சேரிகளில் (Ghettos) அடைத்தனர். ரெனியா ஃபுசெமிஷோள் சேரியில் சிக்கிக்கொண்டாள். நாஜிகள் அந்த குடியிருப்புவாசிகள் அதிகம் பேரைக் கொன்று குவித்தனர் இல்லைஎனில் அவர்களை மரண முகாம்களுக்கு அனுப்பினர்.

ஜனவரி 1940 (பதிப்பகத்தார்)

ஃபுசெமிஷோளைச் சேர்ந்த மாணவர்கள் ஆண்-பெண் இணைக் கல்விக்கு மாற்றப்பட்டார்கள். ஒரு பாலினத்தவர் மட்டும் ஒன்றாகப் படிக்கும் கல்வியைச் சோவியத்தும் அதன் பூர்ஷ்வாக்களும் எதிர்த்தனர்.

ஜனவரி 9, 1940

எங்கள் பள்ளியை மாற்றிவிட்டார்கள். இப்போது பையன்களுடன் சேர்ந்து படிக்கத் தொடங்கினோம். எனக்கு எதுவும் பிடிக்கவில்லை, எரிச்சலாக உள்ளது. படைகளால் வன்முறைக்கு ஆட்படுவேனோ என இன்னமும் அச்சமாக உள்ளது. பையன்களுடன் சேர்ந்து படிக்கவேண்டும் என்ற மாற்றம் எப்படியிருக்கும்? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். 11ஆம் தேதியில் தான் இந்த புதிய சித்திரவதை தொடங்குகிறது. பார்க்கலாம்! என் நாட்குறிப்பே, எல்லாம் நல்லபடியாக நடக்கும் என எனக்கு வாழ்த்துச் சொல். எல்லாம் நன்மைக்கு என நம்புவோம்!

ஜனவரி 12, 1940

பையன்கள் பாவம் ஏதும் அறியா அப்பாவிகளாகத் தன்னடக்கத்துடன் இருக்கிறார்கள். அவர்களில் லுட்விக்கும் மஜோர்கோவும் என்னைக் கவர்ந்தார்கள் எனச் சொல்லலாம். வாழ்வில் பல்வேறு பரிணாமங்களில் பல்வேறு கணவர்களைத் தெரிவு செய்கிறேன். கிட்டத்தட்ட அறுபது பரிணாமங்கள் அடைந்திருப்பேன். வருகிறேன்! முத்தங்களுடன், ரெனியா.

பிப்ரவரி 17, 1940

அப்பா எங்களைக் காண வந்து சேர்ந்தார். எங்களுக்கு மளிகையும் மேலும் சில பொருட்களும் வாங்கி வந்தார். அம்மாவின் கடிதத்தைத் தந்தார். என் அம்மா பிரான்ஸில் இருக்கிறாள். நான் இங்கு ஃபியானோ கற்பதற்கு ஒரு வகுப்பில் இணைந்துள்ளேன்.

இதற்கிடையில், நான் லுட்வக் மீது இனி காதல் வயப்படமாட்டேன். நான் அவனை வெறுக்கவில்லை, ஆனால் தற்போது ஜூரக் மீது பிரேமை ஏற்பட்டுள்ளது. சாத்தியமற்ற வகையில் இர்கா லுட்விக் பின் சுற்றுகிறாள். வகுப்பில், அவர்களின் அருகாமையில் இருப்பதால் அவர்களின் உரையாடல் அனைத்தும் எனக்கு நன்றாகக் கேட்கும். பார்க்கவும் செய்கிறேன். உதாரணத்திற்கு "இர்கா, கிள்ளாதே. அப்புறம் நானும் பதிலுக்குக் கிள்ளிவிடுவேன்" என இவன் சொல்வான். பித்துப்பிடித்தவர்களாக இருவரும் குழைந்து கொள்வார்கள். மாணவ மாணவிகளின் வருகை மிக மோசமாக இருந்தாலும் பள்ளியில் எங்கள் வகுப்பைத் தான் சிறந்தது எனச் சொல்வேன். பௌதீக வகுப்பை அதற்குள் மூன்று முறை புறக்கணித்துவிட்டோம்.

தன் பிறந்தநாளில் எங்கள் எல்லோரையும் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டதாக அம்மா கடிதத்தில் தெரிவித்திருந்தாள். என் கவிதைகள் கிடைக்காததைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாள்.நான் தான் எதுவும் எழுதவில்லையே. நான் மோசமாக உணர்கிறேன். தாத்தாவும் பாட்டியும் என்னிடம் பாசமாகத் தான் இருக்கிறார்கள், ஆனால் தனித்துவிடப்பட்டதாக வெறுமையை உணர்கிறேன்.

மார்ச் 1, 1940

புதன் கிழமை ஒரு பொன்னான நாள். காலை பதினொரு மணிக்கு வகுப்பிலிருந்து நழுவி கோட்டையைக் காண்பதற்குச் சென்று விட்டோம். பனி பந்துகளை எரிந்து விளையாடினோம். பண் இசைத்தோம், கவிதைகள் இயற்றினோம். எனது கவிதை ஒன்று பள்ளி புத்தகத்தில் பிரசுரம் ஆகியது. என் வகுப்பு நண்பர்கள் மற்றும் தோழிகள் இனிமையானவர்கள். எல்லோருடனும் நான் நெருங்கிவிட்டேன்.

மார்ச் 16, 1940

இன்றிலிருந்து சரியாக பத்து வருடத்தில், நானும் நோராவும் சந்திக்கவோ அல்லது கடிதம் எழுதவோ வேண்டும் என நிச்சயம் செய்துகொண்டோம், நல்ல உடல்நிலையில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் மற்றும் பரஸ்பரம் நட்பு அல்லது கோபம் இருந்தாலும் பரவாயில்லை என்று திண்ணமாக முடிவு

எடுத்துக்கொண்டோம். எங்கள் வாழ்வில் நிகழ்ந்தவற்றைப் பகிர்வது மட்டும் இன்றி ஒப்பிட்டுக்கொள்ளவும் முடிவெடுத்தோம். அந்த நாளை நினைவில் வைத்துக்கொள்: மார்ச் 16, 1950.

தற்சமயம் ஹொலெண்டர் என்பவனை எனக்குப் பிடித்துப் போய்விட்டது. எங்களுக்குள் அறிமுகமான சில நாள்களிலேயே அவன் என்னை மறந்துவிட்டான். அவன் திரண்ட தோள்களும் கட்டுமஸ்தான உடலமைப்பும் கொண்டவன். அவன் ரசிக்கும்படியாக இருந்தான் எனச் சொல்வேன்.

ஏப்ரல் 24, 1940

பயங்கரமான சம்பவங்கள் நிகழ்கின்றன. கடந்த மூன்று நாட்களாக எதிர்பாராத விதத்தில் இரவின் நடுவில் அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதுமட்டுமில்லாமல், சிலரை ரஷ்யாவின் உட்பகுதிக்கு அனுப்பிவைத்தார்கள். எங்களின் அண்டைவீட்டாரும் அதில் அடக்கம். பள்ளியில் ஒரே கூச்சலும் அழுகையுமாக இருந்தது. ஐம்பது பேரை ரயில் பெட்டியில் அடைத்துவைத்துள்ளதாக என் தோழிகள் சொன்னார்கள். "போலந்து இன்னமும் உயிர்ப்போடு தான் உள்ளது" என நாங்கள் அனைவரும் பாடினோம்.

ஹொலெண்டர் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா? அவனை நான் நேசிக்கிறேன்; பித்து பிடித்தவளைப் போல சுற்றிவந்தேன். ஆனால் அவனுக்கு பஸியாவிடம் தான் ஈர்ப்பு என அறிந்துக் கொண்டேன். இதெல்லாம் என்னைப் பாதிக்கவில்லை. அவனை வெறுக்கவும் தோன்றவில்லை. என் வாழ்வில் இவனைத் தான் வேறு எந்தப் பையனை விடவும் நேசித்திருக்கிறேன். சிலசமயம் நான் வைராக்கியம் மிக்கவளாக மாறிவிட்டேன் எனத் தோன்றும். எனக்கும் விரைவில் மணமாகிவிட்டால் நலம், எந்தத் தோல்வியும் மனதில் அண்டாது.

மே 1, 1940

மே மூன்றாம் நாள் (போலந்து தேசத்தின் அரசியலமைப்பு நாள்) அல்லாது மே 1 உலக உழைப்பாளர் தினத்திற்கு நான் அணிவகுத்துச் செல்வேன் எனக் கடந்த ஆண்டு இந்நேரம் நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இடைவெளி என்னவோ இருநாட்கள் தான், ஆயினும் எனக்கு என்னவோ அது பெரும் பொருள் பொதிந்த விஷயமாகப் பட்டது. அதன் பொருள் நான்

தற்போது போலந்தில் இல்லாமல் சோவியத் ரஷ்யாவில் உழல்கிறேன் என்பது தான். என் துர்ப்பாக்கியம் இது.

ஹொலெண்டர் நினைவாகவே இருக்கிறேன். அவன் தெய்வாம்சம் பொருந்தியவன், வழிபடத்தக்க அற்புதமானவன். இறுதியில் என்ன பிரயோஜனம்? அவனைப் பற்றி தெரிந்ததால் என்ன மாறிவிட்டது? . ஒரு பையனுடன் குறிப்பிடத்தக்க அளவிற்கு நட்பு ஏற்பட்டுள்ளது என உன்னிடம் சொல்லும் நாள் வருமோ? பரம்பொருளே, நான் மிக அதிருப்தி மயமாகிவிட்டேன்.

ஜூன் 14, 1940 (பதிப்பகத்தார்)

728 போலிஷ் தேசத்தவரை அவ்ஷ்விட்ஸிற்கு (Auschwitz) ரயில்களில் கொண்டு சென்றனர். கொன்றழிப்பு முகாமிற்கு (Concentration Camp) வரவழைக்கப்பட்ட முதல் குழு இவர்கள்.

ஜூன் 17, 1940,

நாளை என் பிறந்தநாள். பதினாறு வயதை அடையப்போகிறேன். இந்தப் பருவம் பொதுவாக ஒருவருக்கு இளமை பொங்கும் வாழ்வின் மிகச் சிறந்த தருணமாக அமையக்கூடும். மீண்டும் "பதினாறு வயதிற்குச் செல்ல வேண்டும்" என மக்கள் எப்போதும் பகர்வதைச் செவியுற்றிருக்கிறேன். ஆனால் நான் துயருற்றிருக்கிறேன். பிரான்ஸ் சரணடைந்து விட்டது. ஹிட்லரின் படை ஐரோப்பாவை வெள்ளக்காடாகச் சூழ்ந்துவிட்டது. அமெரிக்காவும் உதவ மறுக்கிறது. எவர் அறிவார்?, இவர்கள் ரஷ்யா மீதும் படையெடுக்க வாய்ப்புள்ளது.

நான் தற்போது பெற்றோர் இல்லாமல், வீடும் அற்று தனித்துவிடப்பட்டுள்ளேன். கடவுளே! இந்த நிலையில் தான் என் பிறந்தநாள் வர வேண்டுமா?. மரணிப்பது இதை விட மேலானதா?, அவ்வாறு இருப்பின் இறுதிச் சடங்கு நீண்டதாக, சோகமானதாக இருக்கும். என் தாயும் தந்தையும் அழுவர். அவர்கள் என்றுமே என்னை வெறுத்ததில்லை. என் தாயை நினைத்துத் தான் நான் மிகவும் வருந்துகிறேன். அம்மா! அம்மா என்னை விட்டு வெகு தூரத்தில் ஏன் இருக்கிறாய்?.

ஜூலை 1940 (பதிப்பகத்தார்)

போலந்து தேசத்து யூதர்களைத் தொடர்ச்சியாக ஜோசப் ஸ்டாலின் அவர்கள் சைபீரியா மற்றும் பிரோபித்ஷான் போன்ற இடங்களுக்கு நாடு கடத்தினார். (Birobidzhan-சோவியத் ரஷ்யாவில் உள்ள, சீன

எல்லைக்கு அருகிலுள்ள ஒரு நகரம்; 1934 இல் யூதர்களுக்கான தன்னாட்சி நிர்வாக மையமாக இந்த ஊர் பரிணாமம் பெற்றது) போர்காலச் சூழலில் கடும் உழைப்பிற்கும் மோசமான சூழ்நிலைக்கும் குடிமக்கள் தள்ளப்பட்டனர்.

ஜூலை 6, 1940

என்ன ஒரு பயங்கரமான இராப்பொழுது! கோரமாக உள்ளதே! நெஞ்சு படபடக்க, கண்களை அகல விரித்துக்கொண்டு காய்ச்சல் கண்டவளைப் போலக் கிடந்தேன். துருப் பிடித்த வண்டிச் சக்கரங்களின் கிரீச்சிடும் ஒலி மீண்டும் மீண்டும் செவியை அறைந்து கொண்டு இருந்தது. பரம்பொருளே, எங்களைக் காப்பாயாக! ஒரு சரக்கு வண்டி வந்து நின்றது. இன்னொரு மகிழுந்தின் ஊதுகுழல் சத்தமும் கேட்டது. எங்களை அழைத்துச் செல்ல வந்துள்ளதா? அல்லது வேறு யாரையாவது? என் ஆத்மா உடலை விட்டு வெடித்து வெளியேறிவிடுமோ என்னும் அளவிற்கு வருத்திக் கொண்டு கவனிக்க முற்பட்டேன்.

சாவிகளின் சலசலப்பைத் தொடர்ந்து, ஒரு கதவு திறந்தது.அவர்கள் உள்ளே போனார்கள். நான் காத்திருந்தேன். அவர்கள் அந்தச் சரக்கு வண்டி நிறையும் வகையில் ஆட்களை உடனழைத்து வந்தார்கள்.அதில் மழலைகளும் பெற்றோர்களும் முதியோர்களும் அடங்கும்.ஒரு மாது தள்ளாடி நடுங்கியபடி வந்தாள். அவளால் நிற்கவோ அமரவோ முடியவில்லை. இந்தக் கைது நடவடிக்கைகளைச் சில கிழவிகள் நடத்துகிறார்கள். அவர்கள் ருஷ்ய மொழியில் கத்துகிறார்கள். குழந்தைகளை வண்டியில் ஏற்றினர். இரவு முழுதும் துர்ப்பாக்கியமாக இருந்தது. எப்போது விடியும் எனப் பொறுமையில்லாமல் காத்திருந்தேன்.

சிலர் கண்ணீர் சிந்துகிறார்கள். பெரும்பான்மையான குழந்தைகள் ரொட்டித் துண்டு கேட்டு அடம்பிடிக்கின்றன. நான்கு வாரப் பயணம் இருக்கும் என அவர்களுக்குச் சொல்லப்பட்டது. வறுமையில் உழலும் குழந்தைகள், பெற்றோர்கள்
மற்றும் முதியோர்கள். கைவிடப்பட்ட பயம் கலந்த மயக்க நிலையில் விரக்தியும் அவர்கள் கண்களில் தெரிந்தது. ஒடுங்கிய தம் முதுகில் முடிந்தவரை மூட்டை முடிச்சுகளை எடுத்துக் கொண்டனர். பிரோபித்ஷானுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள். மூடப்பட்ட இருள் படர்ந்த ஊர்திகளில் ஐம்பது பேர் வீதமாக அவர்கள் பயணம்
மேற்கொள்வார்கள். காற்றோட்டமில்லாத அழுக்கு படிந்த சுகாதாரமற்ற நிலையில் அவர்களின் பயணம் அமையும். இது நெடும்பயணமாக இருக்கக் கூடும். மகிழ்ச்சி மிக்க சுதந்திர

தேசமாகப் போற்றப்படும் தங்கள் போலந்து நாட்டைப் பிரிந்து செல்லும் குழந்தைகள் பசியால் மடிகிறார்கள்.

இவர்களில் எத்தனை பேர் இலக்கை அடைவார்கள்? வழியிலேயே பலர் தொற்று நோயிலோ அல்லது உடல் நலம் இன்றியோ அல்லது பதற்றத்திலோ மரிக்கக் கூடும். நாடுகடத்தப்பட்ட இவர்கள் ஆசியாவில் எங்கோ வெகுதொலைவில் மணல் குடிசையில் சிக்குண்டு வாழ்ந்து, பசியில் சோர்வுற்று, நிர்ப்பந்தத்தால் தொழிலாளர் வாழ்வினைத் துறக்கம் (சுவனம்) எனப் பின்வருமாறு புகழ்பாட நேரிடும்,

ஆன்ம பலம் பொருந்திய மகத்தான லட்சியவாத தனிமனிதர்
பரந்து விரிந்த தாய்நாட்டை விட அளப்பரியவர்.

(1936இல் இயற்றப்பட்ட சோவியத் ரஷ்யாவின் தேச வழிபாட்டுப் பாடலின் சில வரிகள்-பதிப்பகத்தார்).

ஆகஸ்ட் 8, 1940

எங்கள் தந்தையைச் சந்திக்க இயலாமல் நாட்கள் தள்ளிக்கொண்டே போனது.
கோடை விடுமுறை முடிவுற இன்னும் சில நாள்கள் தான் மிச்சம். ஆனாலும் தந்தையைப் பார்க்க வேண்டும்.

நிலங்களைப் பிடுங்கிக்கொண்டு, சகோதரர்களை, அன்னைகளைக் குழந்தைகளிடம் பிரித்து என்ன சாதித்து விட்டார்கள்? என்ன சாதித்து விடப் போகிறார்கள்? இது எங்கள் இடம். இந்த எல்லை இனி எங்களுடையது எனப் பீற்றி என்ன ஆகி விடப்போகிறது? மேகங்களும், உயர் பார்வை உடைய பறவைகளும், கதிரவனும், இந்த எல்லைகள், துப்பாக்கிகள் மற்றும் இந்த சிறு மனிதர்களைக் கண்டு கேலிப் புன்னகை செய்யும். அனுதினமும் மனித எல்லைகளைப் பொருட்படுத்தாது மழையைப் பாகுபாடின்றி உருவாக்கும் நகரும் மேகங்கள், எல்லைகளை அறியாமல் விறகுகள் பொறுக்கும் பறவைகள், தன் கதிர்களை உலகம் முழுதும் பரப்பும் சூரியன், காற்று போன்றவற்றுடன் மிகுந்த சிந்தனைகளுடன் கூடிய சிறு ஆத்மாவாகிய நானும் இணைகிறேன்.

ஆகஸ்ட் 21, 1940 (பதிப்பகத்தார்)

மூன்றில் இரண்டு பங்கு ஹொரொடென்காவின் (தற்போது உக்ரைன் நாட்டில் உள்ள ஒரு நகரம்) குடிமக்கள் தோராயமாக 9000 பேர் யூதர்கள்.ஜெர்மானியர்களும் அவர்களைச் சுட்டு வீழ்த்துவர். வெறும் பன்னிரண்டு பேர் தான் உயிர் தப்புவர்.

ஆகஸ்ட் 21, 1940

ஹொரொடென்காவிலிருந்து (Horodenka) எங்களை அழைத்துச் செல்ல எங்கள் தந்தை வந்தார். எங்கள் பயணம் குதிரை வண்டியில் நான்கு மணி நேரம் நீடித்தது. தந்தையைப் பார்க்காத ஏக்கம் எனக்கு மிகுதியாக இருந்தது. எங்களைச் சுற்றி அயல் மனிதர்கள் தான் இருந்தார்கள்; அதனால் எனக்கு நெருக்கமானவர்களைக் காணக் காத்திருந்தேன்.

ஆகஸ்ட் 22, 1940

முன்னிரவு முழுதும் நான் அழுதேன். குதூகலத்தில் சீழ்க்கை அடிக்கும் என் தந்தையைப் பார்த்து பரிதாபம் தான் ஏற்பட்டது. அழுதுகொண்டே நான், "தந்தையே, உங்கள் கனவு இனிமையானது தான் ஆனால் இது நம் இல்லம் அல்ல" என்று தெரிவித்தேன்.

செப்டம்பர் 21, 1940

இன்று ஸய்க்மண்ட் என்றழைக்கப்படும் ஒரு பையனைப் பார்த்தேன். நோராவிற்கு அவனைப் பிடித்திருந்தது. அவன் எனக்கேற்ற குணமுடையவன் என அவளுக்குத் தோன்றியவுடன் விலகிவிட்டாள். நோரா பேரறிவு படைத்தவள். இர்காவும் திறன் வாய்ந்தவள். இந்தச் சொற்ப காலத்து ஈர்ப்பு எவ்வாறு செல்லும் எனத் தெரியாது. எனது தன்னம்பிக்கை பற்றி எனக்கு ஐயமாக உள்ளது.

அக்டோபர் 12, 1940 (பதிப்பகத்தார்)

வார்ஸாவில் ஒரு யூதச் சேரி (Ghetto) எழுப்பப்படவேண்டும் என ஜெர்மனி ஆணை பிறப்பிப்பு.

அக்டோபர் 12, 1940

பரிகார நாள் என அழைக்கப்படும் (யோம் கிப்பூர்) பண்டிகை இன்று. நேற்றே அனைவரும் வெளியே சென்றுவிட்டனர். மேஜையில் முறையாக அடுக்கிவைக்கப்பட்ட மெழுகுகளைக் கண்டு, அவற்றில் ஒளியூட்டினேன். அந்தக் கணத்தில் மன அமைதி கிட்டியது. பிறகு, அன்றாடத் துரித வாழ்வில் நடந்தவற்றை மனதில் அசை போட்டேன்.

கடந்த ஆண்டில் கேட்ட அதே கேள்வியைத் தான் இப்பொழுதும் கேட்கிறேன். உன்னை எப்போது காண்பேனோ அம்மா? இங்கு நடந்தவற்றை எல்லாம் நான் உனக்குச் சொல்ல வேண்டும். உன்னைக் கட்டி அணைத்து அழவேண்டும். புளூஸ் (தன் தாய்க்கு ரெனியா இட்ட செல்ல பெயர்), நான் எந்த அளவிற்கு மன உளைச்சலில் இருக்கிறேன் தெரியுமா? என நான் கேட்கும்போது, "நீ அழாதே என் செல்லமே ரெனுஸ்கா " என்று என்னை நீ தேற்றும் நாள் என்று வரும்? என் பெயரை மிக இனிமையாக உன்னை விட யார் சிறந்த முறையில் சொல்வார்கள்?

அம்மா, நான் நம்பிக்கைகளை இழந்து கொண்டிருக்கிறேன். மெழுகில் நடனமாடும் தீபத்தை உற்று நோக்கியபடி நான் கேட்டேன். அம்மா என்ன செய்கிறாய்? எங்களைப் பற்றியும் எங்களின் துவண்ட இதயங்களையும் பற்றி நினைக்கிறாயா?

நகரத்தில் உலாவும் எங்கள் பள்ளியின் பையன்களை நாங்கள் பார்த்து ரசிக்கத் தொடங்கினோம். அனைவரும் நன்கு பழகினோம். மாயிக்கை கிட்டத்தட்டத் தினமும் பார்ப்பேன். இன்று ஸய்குஸ் (ஸய்க்மண்ட்) பள்ளியை விட்டு வீட்டிற்கு வரும்போது எங்களுடன் சேர்ந்து கொண்டான். அவனுடைய சக்திவாய்ந்த கண்களால் என்னை உற்றுப் பார்த்தான். என் முகம் சிவந்து விட்டது.ஆனால் நான் ஏதும் சொல்லவில்லை. விரைவில் நாங்கள் விருந்திற்குச் செல்ல திட்டமிட்டோம்- நான் மகிழ்ச்சி அடைவேனா? நோராவை யாரோ விரும்புகிறான், ஆதலால் என்னை விட அதிகக் கொண்டாட்டமாக அவள் தான் உணர்வாள். எனக்கு எதிலும் பிடிப்பில்லை. புளூஸ் (அம்மா) வரும் வரை?

அக்டோபர் 19, 1940

ரஷ்யக் கூடுகையில், மேஜையின் எதிர் எதிரே நானும் அவனும் அமர்ந்தோம். அவன் என்னை வெறித்துப் பார்த்தான். நானும் தான். என் கண்களை அவனிடமிருந்து விளக்கினேன், ஆயினும் அவன் என்னை இன்னமும் பார்க்கிறான் என்பதை உணர முடிந்தது. பிறகு

அவன் என்னிடம் இரு வார்த்தை பேசும்போது நான் மெய் மறந்தேன்; நம்பிக்கை ஒளி சுடர்ந்தது. ஃவைன் கோப்பையை உதட்டருகில் கொண்டு சென்றபோது என் கனவு நனவாவதாக உணர்ந்தேன். ஆயினும் கோப்பை இன்னமும் சற்று தள்ளி இருக்கிறது. இதழும் இதழும் தழுவுவதற்குள் எதுவேண்டுமானாலும் நடக்கலாம். இதழ்கள் தொடுவதைத் தடுக்கப் பல சாத்தியங்கள் உண்டு. நிதர்சனமான ஒரு காதல் அனுபவமாக என் வாழ்வில் இன்றுவரை இதைத்தான் சொல்வேன், ஏனெனில் ஒரு பையன் (என் அடிமை) என்னிடம் தற்போது தான் என்னைக் கண்டுகளித்து அன்பாக இரு வார்த்தை பேசினான். (ஒருவாறாக ஹொலெண்டருக்குத் திருமணம் என அறிந்தேன்; நல்லது! இனி அவனிடம் எனக்கு எந்த ஈர்ப்பும் இல்லை. நான் கரைந்து விட்டேன்)

அக்டோபர் 23, 1940

இது போட்டிகள் நடக்கும் வாரம். எனவே நான் ஸய்குஸ் பற்றி எண்ணாமல் அவற்றில் கவனம் செலுத்தினேன். அவனுக்கு என்னிடம் இன்னமும் காதல் ஏற்படவில்லை. இதில் நான் தோற்றாலும் எனக்கென என்றென்றும் நீ இருக்கிறாய்.

அக்டோபர் 31, 1940 (பதிப்பகத்தார்)

நாடு கடத்தப்பட்ட போலந்து அரசின் அதிகாரி ஜான் ஸ்டேன்செஃக் (Jan Stanczyk) பின்வருமாறு அறிவித்தார், " தளைகள் தகர்க்கப்பட்ட போலந்தின் குடிமக்களாக யூதர்கள் இருப்பர். மற்றவர்களைப் போல அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் பொறுப்புகளும் சமானமாக நிச்சயம் உண்டு".

நவம்பர் 1940 (பதிப்பகத்தார்)

வார்ஸா நகர யூதச் சேரி எழுப்பப்பட்டு பத்து அடி சுவரின் பணி நிறைவடைந்தது. கூடுதலாக ஓர் அடி முள்கம்பி இந்தச் சுவரை அலங்கரிக்கும்.

நவம்பர் 6, 1940

போட்டியில் முதலிடம் பெற்றேன். ஸய்குஸ் என்னை வாழ்த்தினான். அவன் என்னைக் களிப்புறச் செய்கிறான். இந்த வெற்றி எனது நம்பிக்கைகளை மிளிரச் செய்தன. ஓ! மகத்தான வெற்றி!

பிறகு அந்த அவலமான விருந்திற்குச் சென்றேன். நோரா நடனமாடும் போது நான் முற்றத்தில் தனியாக நின்றிருந்தேன். பிறகு உடனே நான் கிளம்பிவிட்டேன். ஈரமான சாலையில் கூவி அழக்கூடாது என உறுதி செய்துகொண்டு நடந்தேன். நான் இவ்வாறு சிந்தித்தேன், "நான் போட்டிகளில் வென்றிருக்கலாம். அது ஓர் லௌகீக வெற்றியல்ல. ஆனால் வாழ்வில் தோல்வியடைந்து விட்டேன். இனி எந்த விருந்திற்கும் செல்லக்கூடாது என உறுதி பூண்டேன். ஆனால், கூடாது. நான் பிற தளங்களிலும் வெல்ல வேண்டும். என் மனம் கசப்பானவற்றைச் செய்தாலும் சரி உலகியல் வெற்றியை நோக்கித்தான் செல்ல வேண்டும்.

நவம்பர் 18, 1940

இளைஞன் புஷ்கின் என்னும் வசியமிக்கத் திரைப்படத்தைப் பார்த்தேன். புஷ்கின் எனது புதிய ஆதர்ச நாயகன். புகழ்மிக்க வாழ்வு தேவையா அல்லது மகிழ்ச்சியான வாழ்க்கை தான் முக்கியமா என நான் வியக்கத் தொடங்கினேன்.

புஷ்கின் தன் பள்ளிக்காலங்களில் கல்வியில் முனைப்பாக இல்லை. நறுமணம் வீசும் நிலவொளியில் நண்பர்களுடன் இணைந்து ஊர் சுற்றுதலில் தான் அவர் திண்ணமாக இருந்தார். காதலிக்காகப் பரிசுப்பொருள்களைச் சேகரித்தல் போன்ற செயலில் தான் அவர் ஆழ்ந்திருந்தார். அவர் ஏங்கினார், கனவு கண்டார், மூர்க்கமாகக் காதலித்தார். புஷ்கின்! ஒருவர் அந்தப் பெயரை உச்சரிக்கும்போது இயல்பாகவே மதிப்பு தருவார்.

அவரைப்போல் ஒருபோதும் என்னால் புகழ் அடைய முடியாது. கடந்த நான்கு வருடங்களாக நான் அழுக்கு படிந்த கிழிந்த ஆடைகளுடன் பிச்சைக்காரியைப் போலத் திரிகிறேன். காய்ந்த உதடுகளுடன் சாம்பல் படிந்த கற்களைத் தான் பார்க்கிறேன். தூசு நிறைந்த மேகங்களால் மூடப்பட்டதால் வானம் என் கண்களுக்குப் புலப்படவில்லை.மூச்சடைக்கும் புகை மண்டலமாகத் தான் எனக்கு எல்லாம் தெரிகிறது. இந்தப் புகை என் கண்களை எரிச்சல் அடையச் செய்கிறது. எந்தப் புரட்சியும் இதற்கு தீர்வு தராது. எதுவும்.

இதே நாள் பிற்பொழுதில்

என் காதல் முறிவடைந்து விட்டது எனக் கருதுகிறேன். அவன் ஒரு மூர்க்கமான மூடன். என்னுடன் விளையாட விரும்புகிறான். ஆனால்

உனக்கு ஒன்று சொல்ல வேண்டும். எழுதும் அளவிற்கு அவன் தகுதி வாய்ந்தவன் அல்ல.

நவம்பர் 20, 1940

இன்று அவனைப் பழிவாங்கிவிட்டேன். அவனைத் தாக்கி ஒரு கவிதை இயற்றினேன். அவன் துணுக்குற்று என்னைப் பார்த்தான். இனி தொந்தரவு செய்ய மாட்டான். அவன் என்னைக் கவிதை எழுத லாயக்கற்றவள் எனத் தூற்றினான். நான் இன்னமும் உயிருடன் இருக்கிறேன். ஆனால் மனச்சோர்வு அடைந்துவிட்டேன், மிகவும்!

டிசம்பர் 1940

4,10,000 பேர் வார்ஸாவில் யூதச் சேரியில் அடைக்கப்பட்டிருப்பதாக அறிக்கை.

டிசம்பர் 8, 1940

திடீரென நான் அவன் மீது பைத்தியமாகி விட்டேன். யாவும் சிதைந்து போனதாக நினைத்திருந்தேன், ஆனால் யோசித்துப்பார்த்தால் இன்று வாழ்வு மீண்டும் இனிக்கிறது. எதுவும் பெரிதாக நடக்கவில்லை. ஆயினும் சில இனிமையான தருணங்கள். அவன் என் தலைப்பாகையைத் தொட்டு விளையாடினான். அதை வருடினான். என் அருகில் வந்தான். அருமை ஸய்குஸ், மிக அருமை.

நாம் ஃவைன் பருகலாம்
இதழ்களில் சுவை தெரியட்டும்
மதுக்கிண்ணங்கள் காலியானால்
குருதியைக் குடிப்போம்;
தேவையும் ஏக்கமும் இணைந்து உத்வேகம்
பெற்று கொழுந்துவிட்டு எரியட்டும்;
அவர்கள் பெரு நெருப்பை மூட்டட்டும்;
நம் குமுறல்கள் சிதையாக எரியட்டும்;
ஆனால் மறவாதே பெண்ணே தீப்பிழம்புகள்
உன் ரத்தநாளங்களில் பயணம் மேற்கொள்ளும்;
குருதி உள்ளிருந்து வெடித்துச் சிதறும்
தேவையும் ஏக்கமும் இணைந்து உத்வேகம்
பெற்று கொழுந்துவிட்டு எரியட்டும்;
அவர்கள் பெரு நெருப்பை மூட்டட்டும்;
நம் குமுறல்கள் சிதையாக எரியட்டும்;

ஃவைனும் உதடுகளும் ஒரே நிறம் தான், ஒரே வாழ்க்கை தான் மரிக்கும் வரை; எங்கள் இதயங்கள் பசியோடும், இளமையுடனும் நெருப்பாக ஒருவருக்கொருவர் துடிக்கின்றன; ஆனால் மறவாதே பெண்ணே தீப்பிழம்புகள்
உன் ரத்தநாளங்களில் பயணம் மேற்கொள்ளும்.

டிசம்பர் 10, 1940

உனக்குத் தெரியுமா? நான் ஸய்குஸைச் சந்தித்தபோது ஒரேசமயம் ஆனந்தமாகவும், இனிமையாகவும் விரும்பத்தகாததாகவும் உணர்ந்தேன். ஏதோ ஒன்று என்னை ஸ்தம்பிக்கச் செய்கிறது. அவன் ஓர் அறிவிலி; என் அன்பு எத்தகையது என ஒருவேளை அவன் அறியாதவனா? பார்வைக்குப் புலப்படாத ஒரு பிணைப்பு நிச்சயமாக எங்களுக்கு உண்டு. அது உடைய கூடும். இல்லை.. நாங்கள் இணைந்தால் அது ஒரே சமயம் குதூகலமாகவும் துயரமாகவும் ஆகலாம். நான் அறியேன். என் மனம் தடுமாறுகிறது; எனக்கு என்ன ஆயிற்று, தெரியவில்லை.

டிசம்பர் 18 1940 (பதிப்பகத்தார்)
சோவியத் ஒன்றியம் மீது போர் தொடுக்கும் முதல் உத்தரவு இருபத்தி ஒன்றில் ஹிட்லர் கையொப்பமிட்டார். ஒரு தீவிர ராணுவ நடவடிக்கையின் மூலம் அந்நாட்டை நொறுக்க வேண்டும் என அந்த உத்தரவில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்த உத்தரவு, கிழக்கு ரஷ்யாவின் உள்ளார்ந்த பெரும் பகுதிக்குள் செல்லாமல் தவிர்க்க வலியுறுத்துகிறது. இந்தப் படையெடுப்பு ஜூன் 1941 வரை தொடங்கவில்லை.

டிசம்பர் 25, 1940

புளூஸ் (அம்மா), நேற்று உன் பிறந்த நாள். இதோடு உன்னுடைய இரண்டாம் பிறந்தநாளை நாம் இணைய முடியாமல் தவிக்கிறேன். இந்தச் சித்திரவதை எப்போது முடியும்? என் ஏக்கங்கள் பலம் பெறுகின்றன. நான் மோசமாக உணர்கிறேன்; மிக மோசமாக. என் வாழ்வு முடிந்து விட்டது என என்னும் வகையில் வெறுமையாக உணர்கிறேன்; ஆனால் இன்னமும் வாழ்வின் தொடக்கத்தில் தான் உள்ளேன். அடுத்து என்ன என அறியும் பார்வையை இழந்தேன். துயரையும் போரையும் தவிர நான் எதையும் பார்க்கவில்லை. இந்தப் போரும் தோல்வியில் தான் நிறைவுறும். பகல் வேளைகளில் நான் சிரித்துக் கொள்கிறேன். ஆனால் இவை யாவும் பாவனைகள் தான் (மனிதர்கள் கண்ணீர் சிந்த விரும்புவதில்லை).

பல்சுவை நிகழ்ச்சியில் ஸய்குஸ் கலந்து கொள்கிறான்! இன்னும் சொல்லப்போனால் நானும் அவனும் இணைந்து ஒரு காட்சியில் ஈரடிச் செய்யுளை வாசிக்கப் போகிறோம். நான் செய்யுள்களைப் பாட்டாகப் படித்தபோது அவன் என்னை மிகவும் ரசித்ததாக இர்கா சொன்னாள் (நான் அப்படியே நேரெதிராக நினைத்தேன்). பரவாயில்லை.

ஸய்குஸ் வகுப்பிற்கு வந்தபோது என் கரத்தை ஏந்தினான்! என் கரம் என்னுடையது அல்ல எனப் பாவித்தேன். ஒருவேளை இந்தக் கை மற்றொன்றைப் போல் அல்ல எனத் தோன்றியது. நடுக்கத்தில் என் கைகள் மேலும் கீழும் அசைந்தன. அவன் நின்று பாடம் படிக்கையில் என் கண்கள், சிவந்த அந்த உதடுகளை விட்டு அகலவில்லை. இதை ஒப்புக்கொள்ள மனம் மறுக்கிறது.

டிசம்பர் 31, 1940

நாங்கள் பல்சுவை நிகழ்ச்சியில் ஈடுபட்டோம். பார்வையாளர்களிடமிருந்து சிறந்த முறையில் கவனம் பெற்றேன். மேடைக்குப் பின்னால் நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன், ஸய்குஸ் என் கவணியை அவிழ்த்தான்; சரிசெய்தான். அவன் வசீகரம் மிக்கவன், தெய்வக் குணாம்சம் பொருந்திய அற்புதமானவன். நான் கிளம்பும்போது, அவன் ஓடிவந்து அடுத்தநாள் தன்னுடன் விருந்திற்கு வரமுடியுமா என வினவினான். எனக்கு உற்சாகமாக இருந்தது. நோராவிடம் எல்லாவற்றையும் சொன்னேன். அவளும் மஸிக்கும் பிரிந்துவிட்டார்கள். அவளுக்காக நான் வருந்தினேன்.

1940ன் இறுதி நாள் இன்று. புத்தாண்டான நாளையிலிருந்து புதிய சவால்கள், வருத்தங்கள், மகிழ்ச்சிகள் (ஒருவேளை), துயரங்கள் போன்றவற்றைக் கொண்டுவரும். புத்தாண்டில் என் ஆசை என்பது துயருற்று வாழும் என் அம்மாவை மீட்டெடுப்பது தான். நாடுகளிடையே அரசியல் சார்ந்த நல்லுறவு பேணப்படவேண்டும் எனவும் எனக்கு ஆசை. நல்லது நடக்க வேண்டும். புத்தாண்டு குதூகலமாகவும் மகிழ்ச்சியாகவும் அமைதல் வேண்டும்.



படம்: ஃபுசெமிஷோள் பகுதியில் வாழும் யூதர்களை, சான் நதியின் மேல் அமைந்த இரயில்வே பாலத்தைக் கடக்கச் செய்து ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதிக்கு வலுக்கட்டாயமாக இட்டுச் சென்றனர்.

ஜனவரி 3, 1941
விருந்தைப் பற்றிச் சொல்லவேண்டும். எல்லாம் இனிமையாக அமைந்தது. மிகச் சிறந்த தருணம் எது? நாங்கள் நடனமாடியபோது அவன் கிசுகிசுத்ததா? ஜோடி நடனத்தில் நான் தடுமாறியபோது அவன் என் கைகளைப் பற்றியபோதா?
ரெனியா, என்னை விட்டு ஏன் ஓடுகிறாய்? என அவன் சிரித்துக் கொண்டே அழகாகக் கேட்டதா? அவனிடம் நறுமணம் கமழ்கிறது. அவன் என்னைத் தொட்டபோது! அருமை! நன்று! ஒன்றாக அமர்ந்து உரையாடினோம். இனிமையான மாலைப்பொழுது.
நாள் முழுதும் பனி பொழிகிறது. எந்தவொரு பனிப்புயல், பெருமழை சூறாவளியையும் எதிர்கொள்வேன், ஸய்குஸ் என்னுடன் இருந்தால் போதும். என் இனிய காதலனே! என் கடமைகளை மறக்கும் அளவிற்கு அவன் மீது பைத்தியம் ஆனேன். அவனை அடிக்கடி பார்க்க வேண்டும். நாளைக்குள் வீட்டுப் பாடம் முடிக்க வேண்டும். ஆனாலும் ஓர் எட்டு சென்று பார்த்துவிடவேண்டும்.

அவன் மீது மயக்கம் அதீதமாகி விட்டது. பார்க்க வேண்டாம் எனவும் படுகிறது. ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடும் என்னும் அச்சம் ஏற்படுகிறது. இந்த மகிழ்ச்சியான பசுமரத்தாணி போல் மனதில் பதிந்த நினைவுகளுக்கு கேடு விளையக்கூடாது.

ஜனவரி 9, 1941

விளையாடும் போது வேகமாக வந்த பந்து ஸய்குஸின் தாடையைப் பதம் பார்த்தது. அவன் வலிதாங்க முடியாமல் கூனி விட்டான். என் அருமை ஸய்குஸ்! எனக்கு வருத்தம் மேலிட்டது. ஆட்டம் முடியும் வரை நான் எரிச்சலுடன் தான் இருந்தேன். என்னவென்று அவன் விசாரித்தான். நான் எதுவும் பேசவில்லை. அவன் வற்புறுத்தினான். ஏன் எனத் தெரியவேண்டுமா? நான் வருத்தமாக இருக்கிறேன்; இருந்துவிட்டுப் போகிறேன். இத்தீஷ்
மொழியில் (ஐரோப்பிய யூதர்களின் பொது மொழி) பிதற்றிக் கொண்டு அவன் முழு நேரமும் உற்சாகமாகத் தான் இருந்தான். அவன் மருத்துவம் படிக்கப் போகிறானாம். ரெனியா! அடுத்த வருடம் நாம் என்ன செய்யலாம்? லோவோஃப் வந்துவிடு. நாம் இணைந்து படிக்கலாம் என்றான். அம்மாவும் என்னுடன் தற்போது இருந்திருந்தால் என் வாழ்வில் வசந்தம் வீசும் நாள்கள் இவை தான் என்பது நிச்சயம் (அவன் சிறு சிறு குறும்புகள் செய்வான் அவ்வளவு தான்). மற்ற பையன்களைப் போலக் கொச்சையானவன் அல்ல.

பிப்ரவரி 20, 1941,

கனவில் அம்மா வந்தாள்; நானும் ஸய்குஸும் வார்ஸாவில் அவளை மீட்கிறோம்; எல்லா கசப்பான அனுபவங்களும் மீண்டும் நினைவுக்கு வந்தன. வாரக் கடைசியைப் பற்றிக் கவலைப்பட்டேன். பரம்பொருளே, தற்போது வெகுதூரத்தில் வாழும் என் நெருங்கிய தோழியான என் தாய்க்கு தீங்கு நேராமல் காப்பாற்று.

பிப்ரவரி 26, 1941
இனி அவன் மேல் எந்த ஐயமும் கூடாது. கூடுகைக்கு (கிளப்) செல்லலாமா என அவன் அழைத்த விதம் எவ்வளவு தனித்துவம் வாய்ந்தது? நான் வருவதாகச் சொன்னால் மட்டும் போகலாம் இல்லையெனில் வேண்டியதில்லை என்பது தான் அவனது முகபாவம்.
படிக்கட்டுகளில் ஏறும்போது எனது பாடப் புத்தகங்கள் அடங்கிய பொதி மூட்டை பையை அவன் தானே சுமக்கிறான்? எனக்காக வளாகத்தில் காத்துக் கிடக்கிறான். நான் மதிய உணவைத் திறந்தபோது அவனே உரிமையுடன் என் தட்டிலிருந்து இனிப்பை

எடுத்துக் கொண்டதைக் கண்டு அவனை மிக நெருக்கமாக உணர்ந்தேன். ஆனால் நான் எதை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்ப்பேன் தெரியுமா? தின்பண்டத்தை எனக்கு அவன் ஊட்டிவிட்டதைத் தான். அது ஓர் அழகான ஆண்மைத்தனமான நிகழ்வு - கணவனுக்குரியது.

நாட்குறிப்பே, நீயும் அம்மாவும் எனக்கு உற்ற துணை.

மார்ச் 7, 1941
வகுப்பு முடிந்தவுடன் என்னை மெதுவாகத் தள்ளி, தம் இதழ்களை என்னுடைய உதடுகளுக்கு அருகில் வைத்து இவ்வாறு வினவினான், "இந்த இனிமையான எழில் ததும்பும் கண்களை என்ன செய்யலாம்"? "முடிந்தால் சூரியஒளி கண்ணாடி வாங்கிக் கொடு" என்றேன் கண்களைச் சிமிட்டியபடி. ஏன் இரக்கமற்று நடந்து கொள்கிறாய் என்றான் விடாமல். நானா இரக்கமில்லாதவள்? என்றேன். அவன் உடனே என் கைகளை ஏந்தி இல்லை, நிச்சயமாக இல்லை. நாளை என்ன செய்யப் போகிறாய் என்று பேச்சை மாற்றினான். எனக்கு விசித்திரமாக இருந்தது. அவன் வசிப்பிடத்திற்குப் போகலாம் தான். அதில் ஏதும் தவறா என்ன? நான் கடவுளையும் அம்மாவையும் நினைத்துக் கொண்டேன். எல்லாம் எனக்கு நல்லதாக அமைய வேண்டும்.

மார்ச் 18, 1941
ஸய்குஸ் என்னை மாலை ஆறு மணிக்குக் கூட்டிச் சென்றான். நேராக முதலில் சோஷியலஸக் க்ளப்பிற்குச் சென்றோம். அதன் பிறகு இர்காவைச் சந்திக்க அவள் வீட்டிற்குப் போனோம். என்னையும் ஸய்குஸையும் பிணைக்கும் இந்த வாழ்க்கையில் எங்களுக்குள் பிடிபடாத, பிரித்து வைக்கும், வார்த்தைகளால் விவரிக்க முடியாத, ஏதோ ஒன்று உள்ளதாக எனக்குப்படுகிறது. முடிவுறாத ஓர் இசைத் தொகுப்பைப் போல, நான் இதை நினைத்து ஏங்குகிறேன்.
என் மனதைக் கட்டுப்படுத்த மிகவும் சிரமப்படுகிறேன்; உள்ளம் கொதிக்கிறது; மனம் வாடுகிறது. வெட்கம் மறந்த நிலையில் உழல்கிறேன். ஸய்குஸ் என்னிடம் "உன் கண்களைப் பார்த்துக் கொண்டு இருந்தால் நான் அனைத்தையும் மறந்து விடுகிறேன்" சில்மிஷத்துடன் கொஞ்சி தன் சௌந்தரியமான ஈர உதடுகளால் என் உதடுகளை மெதுவாகப் பிதுக்கினான். இசைத் தொகுப்பு நிறைவு பெறுமா?

மார்ச் 19, 1941

எனக்குக் குற்ற உணர்வாக உள்ளது. மனதில் பெரிதாக ஏதோ ஓர் எண்ணம் திரண்டு வந்து என்னை வாட்டுகிறது. எவராவது ஒருவிடமாவது நான் சுய வாக்குமூலம் அளித்தால் மனதிற்குக் கொஞ்சம் அமைதி கிட்டும்.

நான் கடுமையாகிறேன், அன்பின் மூலம் மேலும் கடினமாகி விட்டேன்;
வெதுவெதுப்பான குருதி என் நரம்பு நாளங்களில் கொதிக்கிறது;
நான் நெருங்கிய பந்தத்திற்கு மதிமயங்கி விட்டேன்;
பற்றி எரியும் இச்சைகள் எனக்குத் திகைப்பு தருகின்றன; புலன்கள் என்னை முறுக்குகின்றன; ஆட்கொள்கின்றன;
எனக்குத் தெரிகிறது, நான் ஒரு மிருகத்தைப் போன்றவள்;
என் தன்மானத்தை இழந்து வருகிறேன், வெறுக்கிறேன், பெரிதாகச் சீரழித்துக் கொள்கிறேன்;
ஒரு நாயைப் போல, காயமடைந்த புனுகு பூனையைப் போல நான் நகர முடியாது தவிக்கிறேன்;
என் இதயம் என்னை அழுத்தி இழுக்கிறது;
வாய்விட்டுக் கூப்பாடு போட முடியாது;
ஆனால் ஆவலுடன் எதிர்பார்க்கும் என் தருணம் கிட்டியதும் காட்டுத்தனமாக எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டுவேன்;
பின் நிம்மதியாகக் குறட்டைவிட்டு உறங்கச் செல்வேன்;
அந்த சிவந்த உதடுகள் என் ரத்தச் சிவப்பு இதழ்களால் சிதைக்கப்படும்;
என் வெறித்தனம் தூண்டுதல் யாவும் கனிந்திருக்கவில்லை;
நான் உயிர்ப்புடன் இருக்கிறேன் இன்னமும் மரிக்கவில்லை;
மேன்மேலும் எனக்கு வேண்டும்
என்னால் தொடர முடியவில்லை ..

இது வெறுப்பூட்டும் அருவருப்பான மிருகத்தனமான வாழ்க்கை.

மார்ச் 28, 1941
இன்று நாங்கள் வெகுதூரம் பயிற்சி மேற்கொண்டோம். பேசித் தள்ளினோம். மக்களிடமிருந்து விலகி மேகக் கூட்டங்கள் கூட இல்லாத நீல வானத்திற்குச் சென்று விடலாம் என்றான் அவன். ஏன் நிர்மலமான நீலக் கடலுக்கு அடியில் செல்லக்கூடாதா எனச் சிரித்தேன். உன் நீலக் கண்களுக்குள் நான் வருகை புரிகிறேன் என்று அவன் உரையாடலை முடித்து வைத்தான். நான் மனம் மகிழ்ந்தேன். நீண்ட நட்பான நடை மற்றவற்றை விடச் சிறந்தது தான். ஆனால் நான் அதை எவ்வாறு அறிவேன்?

ஏப்ரல் 1941 (பதிப்பகத்தார்)

வார்ஸா யூதச் சேரியில் மரணிக்கும் கைதிகளின் எண்ணிக்கை முதன் முறையாக 2000ஐ கடந்தது. ஆகஸ்ட் மாதத்தில் அவ்வெண்ணிக்கை 5,560ஐ தொடும்.

ஏப்ரல் 27, 1941
அம்மா, இன்று மனம் இலேசாக இல்லை. சில சமயங்களில் ஸய்குஸ் என்னை வந்து பார்க்காததற்கு நான் காரணங்களை உருவாக்கிக் கொள்வேன். அவன் கூச்ச சுபாவம் உடையவன் (அவன் எளிதாகச் சங்கடப்படுவான்) எனச் சொல்லிக் கொள்வேன். பாட்டி என்னை மகிழ்விக்க மெனக்கெட்டது பயனளிக்கவில்லை. அந்த அசட்டுத்தனமான முயற்சி, சூழலை இன்னமும் மோசமாக ஆக்கியது. என் மனம் இன்று மிகவும் சிதைந்து விட்டது.மனம் சமநிலையை அடையச் சிறிது இடைவெளி பிடிக்கும். இன்று ஏனோ இவ்வாறு துயரமாக அமைந்துவிட்டது.

ஏப்ரல் 1941 (பதிப்பகத்தார்)

அச்சு (Axis) நாடுகள் கிழக்கு ஐரோப்பாவில் மேன்மேலும் ஆழ ஊடுருவி யுகோஸ்லோவியா ராஜ்ஜியத்தைக் கைபற்றித் தங்களுக்குள் பகிர்ந்துக் கொண்டன.

ஏப்ரல் 30, 1941

துயருறும் மனிதர்களில் மிக அதிகமாகத் துயருறுபவள் நான் தான். இர்காவை விருந்திற்கு அழைத்துச் செல்ல ஸய்குஸ் ஏன் முற்படுகிறான்? என்னை ஏன் பகைத்துக் கொள்ளத் தயாராகி விட்டான்? நாள்குறிப்பே, நானும் அங்குச் செல்லத்தான் போகிறேன். என்னை சுயமாகச் சித்திரவதை செய்து கொள்வதே மேல். இதை நான் விடுவதாக இல்லை.

மே10, 1941

மே மாதமே போற்றி! எங்களின் காதல் ஒளி அணையவில்லை. நாங்கள் படங்கள் பார்க்கச் சென்றோம். அருகருகே அமர்ந்து பிணைந்தோம். என் கவிதைகளை வாசிக்க ஸய்குஸ் ஆர்வம் காட்டினான். அவற்றைத் தான் நிச்சயமாகப் பதிப்பிப்பேன் என என்னைப் பயமுறுத்தினான். அவன் அற்புதமானவன், அவனை

விரும்பாமல் எவ்வாறு இருக்க முடியும்? என்னைத் திக்குமுக்காட வைத்துவிட்டான்.

மே 13, 1941

என் பதினேழு வயது வாழ்வில் அதிகபட்ச இன்னல்களை அனுபவித்ததாகத் தோன்றுகிறது. என் உணர்ச்சிகள் யாவும் மருகிப் போன இலைகளின் குவியலாகக் கிடக்கிறது. இந்த மே மாதம் அந்தக் குவியலை எரியூட்ட எண்ணெய் ஊற்றுகிறது. சிறு பொறி பட்டால் போதும், தீப்பிழம்பின் ஜுவாலை முன்னேற்றம் கண்டு வானை முட்டும் அளவிற்குக் கொந்தளிக்கத் தயாராக உள்ளது. என் இதயம், மூளை, மனம், உடல் எல்லாவற்றிலும் தீ பரவட்டும். கலவரமும் பெரு நெருப்பும் மட்டுமே இருக்கட்டும் - எரிந்து விட விரும்புகிறேன், சிவந்த, காமத்தைத் தூண்டும் உதடுகள்..

எனக்குக் கிறுக்குப் பிடித்து விட்டதா என்ன? இன்னமும் மூன்று நாள்களில் இந்த ஆண்டுக்கான கால அளவு முடிகிறது! நான் அலைந்து திரிகிறேன், பகல்கனவு காண்கிறேன், முணுமுணுக்கிறேன்.
தேர்வுகளுக்கு நான் தயார் செய்து கொள்ளவில்லை. என்னால் தாள முடியவில்லை! ஸய்குஸின் பச்சை நிறக் கண்கள், ஆனால் மதுரமான சிவந்த உதடுகள் உடையவன்.

மே 18, 1941

என்ன அற்புதமான மே மாத மாலை நேரம்! பல்வேறு பாதைகள் வழியாக நாங்கள் குன்றுகளை ரசித்தபடியே ஏறினோம். கதிரவன் கதகதப்போடு மிளிர்ந்தான். உஷ்ணம் இல்லாமல் இருந்தாலும் வெயில் நன்றாக அடித்தது. சூரிய அஸ்தமனமும் சிவப்பாகக் காட்சியளித்தது. எங்களின் மனங்கள் ஒன்றிணைந்துவிட்டன. எங்களுக்கிடையே கலவி நிகழ்ந்திருந்தால் கூட இந்த அளவுக்கு நெருங்கிவந்திருப்போம் என நிச்சயமாகச் சொல்ல இயலாது.

நாங்கள் எதைப் பற்றிப் பேசினோம் என நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. அவன் எவ்வளவு கீர்த்தியுடன் இருக்கிறான் என்று நான் குறிப்பிட்டபோது அவன், " பிரபலமான கணவன் வேண்டாமா?"   என் பதிலுரைத்தான்.

எனக்கு நேர்த்தியான வார்த்தைகள் பிடிபடவில்லை. அதனால் இயற்கையின் அமைதி, அருமையான மே மாதக் காலம், சூரிய

அஸ்தமனம், வான வேடிக்கைகள் மற்றும் அன்பின் மழையில் நாங்கள் இருவர் எனக் காட்சிகளை நினைவுகூர்கிறேன்.

என் இனிய புளூஸ் , நீயும் பரம்பொருளும் எனக்கு உதவுவீர்களாக.

ஜூன் 11, 1941

ஆண்டுத் தேர்வில் ஸய்குஸ் இன்று தேர்வாகிவிட்டான். இன்று மிகவும் பொலிவாகக் காணப்பட்டான். மென்மையான என் இனிய காதலன்..

ஜூன் 20, 1941

மற்றுமொரு இனிய மாலைப் பொழுது. விண்மீன்கள் வானில் துளிர்க்கத் தொடங்கிய நேரத்தில் வானை மெருகேற்றும் நிலவொளியில் அருகருகே அமர்ந்து உரையாடினோம். நாங்கள் கிளம்பும்போது இருட்டிவிட்டது. வழி புலப்படாமல் நாங்கள் தொலைந்து விட்டோம்.

இவை யாவும் திடீரென எதிர்பாராவிதமாக இனிமையாகவும் நடந்தேறியது. அவன் "அன்பே எனக்கு முத்தம் கொடு" எனக் கேட்டான். நான் புரிந்துணர்வதற்குள் அது நடந்துவிட்டது. அவனுக்கு இன்னமும் தேவைப்பட்டது. ஆனால் என்னால் முடியவில்லை. எனக்கு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது.

அவன், "நாம் மீண்டும் முத்தமிடுவோம் தற்போதோ அல்லது நாளைக்கோ" என்று சொன்னான். எனக்கு விசித்திரமாகவும் நயமாகவும் இருந்தது. இந்த அனுபவம் மிருதுவாகவும், ,தூய்மையாகவும், இலேசாகவும், பிடிபடாத ஒன்றாகவும் இருந்தது. போதும், நான் சிந்திக்கவும் கனவு காணவும் நிறைய உள்ளன.

ஜூன் 21, 1941

அவனது பச்சை நிறக் கண்களை விரும்புகிறேன். இரண்டாம் முறையாக இன்று முத்தமிட்டுக் கொண்டோம். நான் இதை மிக அருமையாக உணர்ந்தேன். உக்கிரமாகவோ ஆக்ரோஷமாகவோ இல்லை, ஆனால் மென்மையான கவனம் சிதறாதக் கிட்டத்தட்ட அச்சம் மிக்க ஓர் அனுபவம். எங்கள் இருவருக்குமான வளர்ந்துவரும் பந்தம் எவ்வகையிலும் பாதிப்படைய விரும்பவில்லை. புளூஸ் மற்றும் பரம்பொருளை நான் உதவிக்கு நாடுவேன்.

ஜூன் 26, 1941

என்னால் எழுத இயலவில்லை. அச்சத்தால் பலவீனம் அடைகிறேன். மீண்டும் யுத்தம், ரஷ்ய-ஜெர்மன் இடையே மீண்டும் வம்பு. ஜெர்மானியர்கள் இங்கு இருந்தார்கள்; பிறகு அவர்கள் பின்வாங்கினார்கள். நிலவறையில் கோரமான நாள்கள்.
அன்புமிக்க
தெய்வமே, என் தாயாரை என்னுடன் சேர்த்து விடு. இன்று காலை, இவ்வூரை விட்டுத் தப்பிச் சென்றவர்களையும் இங்கு வாழும் எங்களையும் காப்பாற்று. ஸய்குஸைக் காப்பாற்று.

மிக மோசமான நிலையில் கூட, நான் வாழ விரும்புகிறேன். எல்லோர் சார்பாக நான் உன்னிடம் அடி பணிந்து மண்டியிடுகிறேன். இன்றிரவு பயங்கரமாக அமையக்கூடும். நான் பீதியில் உள்ளேன். என் பிரார்த்தனைக்குச் செவி மடுத்து இந்த அவலமான காலத்தில் என்னுடன் இருப்பாய் என நம்புகிறேன். நீ ஏற்கெனவே என்னை மீட்டிருக்கிறாய். இப்போதும் காப்பாற்று. பரம்பொருளே, நான் நன்றி மறவேன்.

எங்களுக்கு என்ன ஆகும் என நிச்சயமாகத் தெரியாது. கிட்டத்தட்ட ஒட்டுமொத்த நகரமும் இடிபாடுகளில் சிக்கியுள்ளது. வெடிகுண்டின் ஒரு பகுதி எங்கள் வசிப்பிடத்தினுள் விழுந்தது. இவையாவும் பயங்கரமான நாட்கள். உனக்கு நான் இதை விவரிக்க வேண்டியதில்லை. வெறும் வார்த்தைகளாகத் தெரியும். சிணுங்கும் தோட்டாக்களில் ஒன்றிவிடும் நிலையில் வாடும் எங்கள் ஆத்மாக்களின் துயரை அவை நேர்த்தியாகப் பிரதிபலிக்காது.

பறந்து வரும் ஏவுகணைகளைக் காணும் பொழுது இவை உன் வீட்டைத் தாக்கக்கூடாது என்று தான் கெஞ்சத் தோன்றும்.எவ்வளவு பெரிய சுயநலமான எண்ணம்! உன் வீட்டைத் தாக்காத ஏவுகணை பிறிதொருவரின் வீட்டை நிச்சயம் தாக்கும் என ஏன் தோன்றவில்லை?

அன்புள்ள நாள்குறிப்பே! நீ விலைமதிப்பற்றவள்; கொடூரமான தருணங்களில் நான் உன்னை மார்பில் அணைத்துக் கொள்கிறேன்.

ஸய்குஸ் எங்குப் போனான்?, தெரியவில்லை. அவனுக்கு எந்தத் தீதும் ஏற்பட்டிருக்காது என அக்கப்பூர்வமாக நம்புகிறேன். கடவுளே, அவனுக்கு எந்தக் கேடும் ஏற்பட்டிருக்கக் கூடாது, அவனைக்

காப்பாற்று. மேல் முகட்டில் இருந்த என்னை நோக்கி, அவன் கடைசியாகத் தூரத்திலிருந்து முத்தச் செய்கை செய்த சிலமணி நேரங்களில் இந்த அவலங்கள் நடக்கத் தொடங்கின. முதலில் ஒரு குண்டுச் சத்தத்தைச் சற்று தூரத்தில்
செவியுற்றேன். பிறகு ஓர் அபாயச் சங்கொலி, பேரழிவு மற்றும் மரணத்தின் அவல ஓலம். இர்காவும் நோராவும் எங்கே போனார்கள்? எவரையும் காணவில்லை.

இன்றிரவு வேறு எதுவும் நான் எழுதுவதாக இல்லை. பரம்பொருளே அனைவரையும் காப்பாயாக! அன்னையை இங்கு வரவை, என் மனதை இலகுவாக்கு .

ஜூன் 30, 1941 (பதிப்பகத்தார்)
சோவியத்திடமிருந்து ஜெர்மனி துருப்புகள் லோவோஃப் நகரைக் கைப்பற்றினர்; யூதர்கள் தம் கைப்பட்டைகளில் பொறிக்கப்பட்ட தாவவூத்தின் (Star David) நட்சத்திரச் சின்னத்தை நன்றாகத் தெரியும்படி அணிந்துக் கொள்ள வற்புறுத்தப்பட்டனர் (யூத அடையாளச் சின்னம்).

1941 (பதிப்பகத்தார்)
பொனாரே (Ponary) படுகொலைகள் வில்னாவில் (Vilna-போலந்தின் யூதர்கள் அதிகம் வாழும் நகரம்) தொடங்கியது. நாஜிகளும் லித்துவானியர்களும் இணைந்து 70,000 யூதர்களை இறுதியாகக் கொல்வர்.

ஜூலை 1, 1941

நாங்கள் நலமாக உயிரோடு இருக்கிறோம். நாங்கள் அனைவரும், நோரா, இர்கா , ஸய்குஸ், என் நண்பர்கள் மற்றும் என் குடும்பம். நாளை, மற்ற யூதர்களைப் போன்று நானும் வெண்மையான யூத அடையாளச் சின்னத்தை அணிந்து கொள்ள வேண்டியது தான். உனக்கு நான் அதே ரெனியாவாகத் தான் எப்போதும் இருப்பேன். ஆயினும், இந்த வெண்மையான கைப்பட்டையில் நீல நட்சத்திர தாவூத்தை அணிவதால் நான் பிறருக்குத் தாழ்வாகத் தெரிவேன். நான் யூதப் பெண்ணாகிவிட்டேன்.

நான் கண்ணீர் சிந்தவில்லை; எனக்கு எந்தப் புகாரும் கூட இல்லை. வாழ்வை விதியின் போக்கில் விட்டு விட்டேன். எனினும் எனக்கு விசித்திரமாகவும் துக்ககரமாகவும் உள்ளது. எனது பள்ளி விடுமுறை நாள்கள் நிறைவடையும் தருவாயில் உள்ளன; ஸய்குஸ் உடனான வசந்த கால நாட்களும் முடிகிறது; அவனை எப்போது

சந்திப்பேன் எனத் தெரியவில்லை. அம்மாவைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. கடவுள் எங்களைக் காப்பாற்றட்டும்.

அன்புள்ள நாட்குறிப்பே உனக்குப் பிரியாவிடை தருகிறேன். நான் சுதந்திரமாக இருக்கும் இந்தத் தருணத்தில் உனக்கு எழுதுகிறேன். நான் நாளை வேறொரு நபராக அறியப்படுவேன், புற உலகில் தான். புதிய அடையாளத்துடன் உன்னை நான் அணுகக்கூடும். பரம்பொருளே எனக்கு அந்த வாய்ப்பைக் கொடு. உன்னை நான் நம்புகிறேன்.

ஜூலை 3, 1941

தற்போது வரை புதிதாக எதுவும் இல்லை. அடையாளப் பிணக்கு இல்லாத எங்கள் நிலை பற்றி உனக்கு விவரிக்கிறேன். அடையாளச் சின்னங்களுடன் நாங்கள் திரிகிறோம். பயமுறுத்தும் துயருறும், மற்றும் ஆறுதல் தரும் செய்திகளை மாறி மாறிப் பார்த்துக் கொண்டு எங்களது சேரியில் கிடக்கிறோம்.

இன்று அவன் என்னைச் சந்தித்தான்.
குதூகலத்திலும் குழப்பத்திலும் நான் பித்து பிடித்தவளைப் போல அலைவேனோ எனத் தோன்றியது. காயங்களை ஆற்றும் ஒரு சிகிச்சையகத்தில் அவன் பணியாற்றுகிறான். எப்போதும் போல அவன் இனிமையாகவும் அற்புதமாகவும் நடந்துக் கொண்டான். மருத்துவக் கல்விக்காகப் பல்கலைக்கழகத்தில் இணைய முடியாமல் போனது அவனது துரதிருஷ்டம். மிகச்சிறந்த மருத்துவராக வந்திருப்பான். இன்னமும் காலம் இருக்கிறது. நீயே சான்றாக இருப்பாய். நாளை சிகிச்சையகத்தில் சந்திக்கலாம் என முடிவு செய்துள்ளோம். விசித்திரம் யாதெனில் இந்த இற்றுப்போன சின்னத்துடன் தான் நாங்கள் எங்கும் செல்ல வேண்டியதாக உள்ளது.

கடவுளே உடனடியாக அம்மாவை என்னிடம் சேர்ப்பாயாக. மோசமான சூழலிலும் நற்சூழலிலும் புளூஸ் என்னுடன் கூடவே இருக்கட்டும். உன்னை நான் சார்ந்து இருக்கிறேன். பரம்பொருளே! நிச்சயம் உதவி புரிவாய் என நம்புகிறேன்.

அக்டோபர் 9, 1941

அம்மாவுடன் இருக்கிறேன் என்பதை விட வேறு என்ன அற்புதம் எனக்கு நடந்துவிடும்? பிள்ளைகள் தாயுடன் வாழ்வது இயல்பு. ஆனால் எனக்கு இது அசாதாரணமான நிகழ்வு. அன்னையுடன்

நேரத்தைச் செலவழிப்பது பிள்ளைகளுக்கு ஓர் அன்றாடம். ஆனால் என் அம்மா சற்று வேறுபட்டவள். அவள் எனக்குத் தோழி மட்டுமல்ல, சகா.

அம்மா மீண்டும் கிளம்பி விட்டாள்; ஏக்கத்தில் நான். இந்த உலகில் உலவும் லட்சக்கணக்கான சிறுமிகளில் நானும் ஒருத்தி. எல்லோரையும் போல சிலரை விட அசிங்கமாகவும் பலரை விட அழகாகவும் தெரியக்கூடும், ஆயினும் இன்னமும் எனக்கென தனித்துவம் உள்ளது. ஸய்குஸ் கூட அவ்வாறு தான். அவன் உணர்ச்சிகரமான நுண்ணறிவுள்ளவன். அவனது ஒளியூட்டும் பசுமையான கண்களுக்கு நான் அடிமையாகக் கூடாது என ஏன் சொல்கிறாய் அம்மா? நான் அவனுடன் முன்னரே இணைந்துவிட்டதை நீ பார்க்கவில்லையா?

அக்டோபர் 15, 1941 (பதிப்பகத்தார்)

ஆஸ்திரிய (Austria) யூதர்களை, கைப்பற்றப்பட்ட போலந்து யூதச் சேரியில் (கெட்டோ) நாஜிகள் அடைத்தார்கள்.

இலையுதிர் காலம் 1941 (பதிப்பகத்தார்)

ஃபுசெமிஷோள் நகரில், கார்பார்ஜி (Garbarze) என்னும் பகுதியை யூதர்களுக்கான மாவட்டமாக நாஜிகள் அறிவித்தனர். சான் நதியின் மூன்று திசைகளிலும் மறுபுறம் ரயில் தண்டவாளமுமாக இப்பகுதி சூழப்பட்டுள்ளது. சுற்றியுள்ள இடங்களில் வாழும் யூதர்களை இங்கு இடம் பெயருமாறு அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர்.

நவம்பர் 7, 1941

கெட்டோ! (யூதச் சேரி) இவ்வார்த்தை செவிகளில் ரீங்காரம் புரிகிறது. எங்களுக்கு என்னவாகும் எனத் தெரியாது. எங்களை எப்போது அழைத்துச் செல்வார்கள் எனவும் தெரியவில்லை. மதியம் இரண்டு மணிக்குள் எங்கள் குடியிருப்புகளை 25 கிலோ பொருள்களுடன் காலி செய்யுமாறு நாங்கள் பணிக்கப் பட்டோம். வேறொரு சேரியாக இருக்கலாம். நாங்கள் முக்கிய ரஸ்தாவிலிருந்து அப்புறப்படுத்தப்படுவோம் எனத் தோன்றுகிறது.

நேற்றிரவு பத்து முப்பது மணிக்கு வரவேற்பறை கதவின் அழைப்புமணியை யாரோ அடித்தார்கள். யாராக இருக்கும்? காவலர்! முகத்தை கைகளால் அழுத்திக் கொண்டு நான் உன்னிடம்

கூக்குரல் இட்டேன். பரம்பொருளே! நீ செவி மடுத்தாய். அந்தக் காவலர் எங்கள் பழைய கிராமத்தைச் சேர்ந்தவர்; லஞ்சம் வாங்கத் தயாராய் இருந்தார். கிராமத்து நல்வாழ்க்கை, நண்பர்கள், மகிழ்ச்சியான தருணங்கள் போன்றவற்றைப் பற்றி உரையாடினேன். இவ்வுரையாடல் சுமாராக வேலை செய்தது; அகிலத்தைப் படைத்த பரம்பொருளே, தூசியின் ஒரு புள்ளியாகிய நான், தாய் தந்தையின்றித் தவிக்கிறேன்.
என் கோரிக்கையைக் கேட்பாயாக!

நவம்பர் 24, 1941


அம்மா (புளூஸ்) வெள்ளிக் கிழமை வந்தாள்! இன்று கிளம்பிவிட்டாள்!
அவளுக்கு ஸய்குஸைப் பிடிக்கவில்லை, ஒருவேளை அவன் ஆரிய இனத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என விரும்புகிறாளோ? இந்த உறவைத் தீவிரமாக ஏந்திச் செல்ல வேண்டாம் என அம்மா எச்சரித்தாள். எனக்கு விசித்திரமாக இருந்தது, இந்த அறிவுரைகளுக்குப் பிறகு நான் அவனிடம் மனதளவில் விலகுகிறேன், அவனைப் பிடிக்காமல் போனது மட்டுமல்லாமல் அவனை அஞ்சுகிறேன். சில சமயங்களில் புளூஸ் கூட தவறு
செய்வாள். அவளுக்கு என் காதலனைப் பரிச்சயம் இல்லை. ஆனால் அவள் சில சமயம் சரியாகவும் இருந்தாள்! ஏனெனில் அவனுடைய வற்புறுத்தக் கூடிய பிடிவாதத் தன்மையானது எனக்கு விருப்பமான குணமாக இருந்ததே ஒருநாள் எனக்கு சித்திரவதையாக மாறக்கூடுமா? அவனுக்கு வேண்டியதை என்னிடம் பெற்றுக் கொண்டு என்னைக் கைவிட்டு விடுவானோ? என் வாழ்வு சூனியமாகிவிடுமோ என அச்சம் ஏற்படுகிறது.

நான் ஏன் கொந்தளிப்புடன் இருக்கிறேன்? அம்மா அவனைப் பற்றி சொன்னதினாலா? இல்லை, அவனே என் கணவனாக வேண்டும் என இன்னமும் விரும்புகிறேன். எதற்கும் ஆசைப்பட்டு பின்னால் நிறைவேறாமல் வருந்துவாய் என அம்மா சொன்னாள். இந்தச் சிறு பெண்ணின் மனப்பூர்வமான வேண்டுகோளைக் கடவுள் கேட்பார் என நினைக்கிறேன். ஆம்! இது நடக்க வேண்டும். என் கனவுகளை நனவாக்கு கடவுளே. நான் உன்னையே புகழ்கிறேன். அருள்புரி.

நவம்பர் 26, 1941

அம்மா சென்றபின், ஸய்குஸ் உடன் இரவு முழுவதும் வாக்குவாதம் செய்வதாகக் கனவு கண்டேன். அவனிடம் சினம் கொள்வதற்கான

காரணம் அறியேன். அவன் இன்று இனிமையாகவும் மென்மையாகவும் காணப்பட்டான், எனக்கு என் மீது தான் எரிச்சல் ஏற்பட்டது. ஒருவேளை அம்மா கூறியதைப் போல நான் துன்புறலாம். ஆனால் என் கனவைக் கைவிட வேண்டுமா என்ன?



படம்: ஸய்குஸ் மற்றும் ரெனியா

ஜனவரி 19, 1942

இன்று அவன் பிறந்தநாள். என் கவிதைத் தொகுப்பை அவனுக்கு அளித்தேன். அவன் மெய்மறந்தான்! அவன் இதனால் மிகவும் கவரப்படுவான் என நான் எண்ணவில்லை. என்னை எவ்வாறு வாழ்த்தப் போகிறாய் என வினவினேன். இணைபிரியாமல் இந்த யுத்தக் காலத்தைக் கடந்துவிட வேண்டும் என்றான். என்னுடைய ஆசை மட்டும் வேறு என்னவாக இருந்துவிட முடியும்? அவன் நினைத்தது போல் இந்தக் கவிதைகள் எங்களைப் பிணைக்கின்றன. என்னைப் புரிந்துணர்ந்த அவனை நான் எவ்வாறு விரும்பாமல் இருப்பேன்?
பாடல்கள் ஆத்மாக்களை இணைத்து அன்பைப் பெருக்கும். கடவுளே, என் கனவுகளைக் காப்பாற்றியதற்கு உனக்கு நன்றி.

மார்ச் 25, 1942

எங்கள் குடியிருப்புகளை மூடுகிறார்கள்; மக்களை ஊரை விட்டு வெளியேற்றுகிறார்கள். இவையாவும் சட்டவிரோத துன்புறுத்தல்கள். இவற்றைத் தாண்டி, இவற்றை மறக்கச் செய்யும் வசந்தகால முத்தங்கள், இனிய வருடுதல்கள்.

ஏப்ரல் 20, 1942

இன்று ஃப்யூரரின் (ஹிட்லர்) பிறந்தநாள். என் சக்திக்கு ஏற்றவரை கத்த வேண்டும்.

உன்னால் 18 மாதங்களில் காதலில் லயிக்க முடியுமா? அனைத்தும் துடிப்பான, இளமையிலும் காதலிலும் வாழ்விலும் உதிர்கின்ற மெய்யான விஷயங்கள். ஒரு ரதத்தில் பயணிப்பதைப் போன்று உணர்ந்தேன். மழையுடனும் காற்றுடனும் போட்டி போடுகிறேன். எனக்கு மூச்சு முட்டுகிறது. வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறுகிறேன். உணர்ச்சிவசப்பட்டு நான் மேலும் மென்மையாகி விட்டேன். அந்த ஃப்யூரரைக் கழுத்தை நெறித்துக் கொள்ள இன்று நான் தயார் தான். ஆனால் அதன் பிறகு என் வாழ்வு என்னவாகும்? ஸய்குஸ் இதை நான் உனக்காக மட்டும் தான் எழுதுகிறேன்! என் இதயத்தை உனக்குத் தந்தேன் மேலும் நீ எனக்கு அளப்பரிய அன்பை அளிக்கிறாய்! மகிழ்ச்சி, இனிது.. கனவுகள்! பித்து பிடிக்கின்ற அருமையான கனவுகள்!

மே 1942 (பதிப்பகத்தார்)

ஃபுசெமிஷோள் நகரிலிருந்து 375 மைல்கள் தொலைவிலுள்ள ஃட்ருப்லின்காவில் (Treblinka) நாஜிகள் ஓர் அழிவு முகாம் கட்ட ஆணையிட்டனர். அங்கே இயங்குகிற இரண்டு ஆண்டுகளில், 870000 முதல் 925000 மக்களைக் கொல்வர்.

மே 11, 1942

இன்று நோராவுடன் நாளைக் கழித்தேன். காதலைப் பொறுத்தவரை அவள் என்னைப் போல் தீவிரமாக இல்லை. இத்தீவிரத்தன்மை எனக்குத் துயரத்தைத் தரும் என அவள் சொன்னாள். இருக்கலாம், ஆனால் உனக்குத் தெரியும் நான் வேறு ஒருவராக மாற இயலாது. எங்களது உரையாடல் உவப்பாக இல்லை. எனக்குத் தலைவியுடன் சோர்வும் ஏற்பட்டுவிட்டது. மேலும், இந்தச் சேரியில், இந்தச் சூழலில், இந்த யுத்தக் காலத்தில், எனக்கு அருள் செய் புளூஸ் மற்றும் பரம்பொருளே!

மே 12, 1942

இந்த நகரம் நோய்வாய்ப்பட்டது போல் தெரிகிறது. இந்தச் சேரியில் மீண்டும் இருள் படர்ந்துவிட்டது. யாரும் அறியாதவாறு என்னால் அழ முடிந்ததை எண்ணி திருப்தி அடைந்தேன். கடவுளே, அவர்கள் என்னை அழைத்துச் செல்லும் தருணம் முன்னரே நடந்திருக்க வேண்டும் என விரும்புகிறேன்!

இல்லை, அவ்வாறு நடக்கக் கூடாது. பரம்பொருளே என்னை மன்னித்துவிடு. நான் அதீத மனக்கசப்பால் அவ்வாறு யோசித்து விட்டேன். கட்டாய உழைப்பைக் கோரி சிறுவர் சிறுமியரைக் கடத்துகிறார்கள் என அம்மா மடல் எழுதியிருக்கிறாள். கிளம்பத் தயாராய் இரு எனச் சொன்னாள். அவளுக்கு எங்களுடன் சேர்ந்திருக்க விருப்பம். அதேசமயம் மணவிலக்குப் பெற தந்தைக்கு சட்டப்பூர்வ மடல் எழுதவும் அவள் விரும்புகிறாள்.

என் தாயும் தந்தையும் சமரசம் செய்து கொள்ள விரும்பவில்லை. என் தாய் மறுமணம் செய்வாள். அதன் பிறகு அவளது இல்லத்திற்கு நான் எவ்வாறு செல்ல இயலும்? அவளது புதுக் கணவர் திண்ணமாக எனக்கு அன்னியனாகத் தான் தெரிவார். வரும் காலங்களில் என்னைப் பார்க்க முடியுமா என்றே தெரியவில்லை என என் தந்தை எழுதியிருந்தார்! தந்தையே, தாங்கள் என்னைப் போல ஒரு துர்ப்பாக்கியமான யூதர்! யூத சேரிச் சிறையில் வாடும் பரிதாபகரமான யூதர்! கடவுளே! என்னைக் காப்பாயா? அவர்களைக் காப்பாயா? அனைவரையும். தயவு செய்து ஏதாவது அற்புதம் நிகழ்த்துவாயாக!

வாழ்வு துயரமானது தான். ஆனால், நான் இறந்து விடுவேனோ, எதிர்காலத்தில் என்ன காத்திருக்கிறது என எண்ணும் போது நான் அதிகச் சோகம் கொள்கிறேன். கடவுளே! நான் பலமுறை உன்னிடம் முறையிட்டிருக்கிறேன், நீயும் செவி சாய்த்திருக்கிறாய். கருணை கூர்ந்து எங்கள் துயரைப் போக்கு! தற்போது நான் நன்றாக உணர்கிறேன். அழுது தீர்ப்பதில் நன்மை கிட்டுகிறது. உணவு தான் பிரதானம் என மக்கள் சொல்கிறார்கள். இரவில், நல்ல வயிறார உண்டேன், இருப்பினும் மனம் வெதும்புகிறது. எனக்குப் பசியில்லை. யாராவது என்னைப் பாதுகாப்பார்களா என ஏங்குகிறேன்.

மற்றும் ஸய்குஸ்? நான் வாழ்வை முடித்துக் கொள்ளக் கூடாது என எண்ண இவனே வழிவகை. அம்மா, என் மணவாழ்க்கைக்குத் தடை போடாதே. உனக்கென ஒரு புது வாழ்வை நீ தேர்ந்தெடுத்துக் கொண்டாய். நீ மேலும் சில குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம்.

வருங்காலத்தில் நாம் ஒரே இல்லத்தில் சேர்ந்து வாழ்வோம் என எனக்குத் தோன்றவில்லை. இவ்வாறான அச்சுறுத்தும் விநோதக் கனவு ஒன்று எனக்கு வந்தது. மெய்யாகச் சொல்ல வேண்டுமெனில் நான் ஏமாற்றம் அடையவில்லை. உலகைச் சுற்றிப் பார்த்தேன், வெறுமை என்னைப் பயமுறுத்துகிறது.

மற்றும் அம்மா? யாரோ ஓர் அன்னியனுடன் வாழப் போகிறாள். இனி அலற்றிப் பயனில்லை. என் காதலன் அவளுக்கு அன்னியனாகத் தெரிவான். வாழ்வு மனிதர்களை ஒரேசமயம் பிணைக்கவும் பிரிக்கவும் செய்கிறது.

மே 20, 1942

வேலையை முடித்து தொழிற்சாலையிலிருந்து கிளம்ப எத்தனித்த போது, ஸய்குஸ் என்னை அழைத்துச் செல்ல வந்தான். கைகளைக் கோர்த்தபடி நாங்கள் காலாற நடந்தோம். பழத் தோட்டங்கள் பூத்துக் குலுங்குகின்றன. மே மாதம் தெளிவான நீல வானத்தில் ஜொலிக்கிறது. நானும் மின்னுகிறேன். ஒரு சிறு குழந்தையைப் போல அவனுடன் என்னை உணர்கிறேன். எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

மே 23, 1942

கடந்த சில நாள்களாக என்னை ஏதோ ஒரு விஷயம் தொந்தரவு செய்கிறது. என் காதல் முடிவுக்கு வந்தால் வாழ்வு எவ்வாறு மாறும் என நோரா சிந்திக்கிறாள். நான் காதலில் தீவிரமாக இயங்குவதில் அவளுக்கு அதிருப்தி. என்னைக் குற்றம் சாற்றுகிறாள். அவள் ஏதோ இதில் உலக அனுபவம் பெற்றவளைப் போலக் காண்பித்துக் கொள்கிறாள். என்னைக் காயப்படுத்துகிறாள். ஸய்குஸ் என்னை மெய்யாக விரும்புகிறானா என அவளுக்கு ஐயம் ஏற்படுவதை என்னால் புரிந்துணர முடிகிறது.

அவனும் இங்கிதம் இல்லாமல் சில சமயம் பேசிவிடுகிறான். மோசமாக நான் வருந்தும் நிலை உண்டாகிறது. சிலசமயம் தொந்தரவின் உச்சத்தில் எங்காவது ஓடிவிடலாமா என நான் நினைப்பதுண்டு. ஆனால் அவன் என்னை இறுகி அணைக்கும் போது எந்தப் பொக்கிஷம் கிடைத்தாலும் மறுத்து நான் அவனுடன் தான் இருக்க வேண்டும் என உணர்கிறேன். என் ஆத்மா அவனையே எண்ணுகிறது.

நோரா, நீயும் நானும் வேறு. உனக்குப் புரியாது. உன் கூற்றுத் தவறு. எனக்கு இழக்க ஒன்றுமில்லை.

ஸய்குஸ் என்னுடன் இனிமையாக நல்லபடி இருக்கும்போது நான் வாழ்வை ஒளிமிக்கதாகக் கண்டேன். இரவு விண்மீன்களில் ஜொலிக்கிறது. நான் கனவு காண்கிறேன், மீண்டும் மீண்டும்.

ஜூன் 2, 1942

தற்போது "பரவசம்" என்னும் பதத்திற்குப் பொருள் அறிந்தேன். அதை விவரிக்க இயலாது. காதல் மற்றும் கலவி புரியும் இரு உயிர்களுக்குக் கிடைக்கும் வரம் அது. முதல் முறையாக என் காதலனுடன் ஆத்மார்த்தமாக இணையும் ஏக்கம் உருவானது. உடல் சிவக்கும்வரை கட்டிப்பிடிக்க, பிழிய, கடிக்க.. ஸய்குஸ் புதுமனை பற்றியும் கார் வாங்குவது குறித்தும் பேசினான். எனக்கான மேம்பட்ட மனிதனாக அவன் பரிணாமம் அடைய எத்தனிப்பது பற்றிப் பிதற்றினான்.

கடவுளே, என் மீதான கருணைக்கும், அன்பிற்கும் மகிழ்வளிப்பிற்கும் நான் கடமைப்பட்டவள்! நான் வெவ்வேறான வார்த்தைகளைப் போடுகிறேன். வார்த்தைகள் மறந்துவிடக் கூடாது என மண்டையில் வைத்து கிசுகிசுக்கிறேன். எதைப் பற்றியும் சிந்திக்க வேண்டாம் எனத் தோன்றுகிறது. என் இச்சைகள் வேறு திசையில்.. சிறிது அந்தரங்கமாக.. புளூஸும் கடவுளும் உதவி புரிதல் வேண்டும்.

ஜூன் 3, 1942 (பதிப்பகத்தார்)

சான் நதியின் மேற்கில் ஃபுசெமிஷோளின் சசானி (Zasanie) குடியிருப்பின் யூதக் குடிகளை நாஜிகள் கொன்றனர்.

ஜூன் 1942 (பதிப்பகத்தார்)

போலந்து நாட்டின் பல்வேறு நகரங்களிலிருந்து 5000 யூதர்கள் ஃபுசெமிஷோள் நகரத்திற்கு இடம் பெயர்க்கப்பட்டனர்.

ஜூன் 6, 1942

எரிச்சலூட்டுகின்ற கனவுகளுடன் நான் போராடுகிறேன். இன்று ஸய்குஸ் என்னைச் சந்திக்கவில்லை. அவன் கடும் உழைப்புக்கு ஆளாகியுள்ளான்; சோர்வடைந்து பலவீனப்பட்டுக் கிடக்கிறான். நேரெதிராக நான் ஆற்றலால் நிறைந்துள்ளேன். வாழ வேண்டும்

என்னும் பேரவா என்னைக் கடுமையாக்கியுள்ளது. புளூஸும் கடவுளும் எனக்கு உதவட்டும்.

ஜூன் 7, 1942

நான் மன அமைதியுடன் திகழ்கிறேன். குடியிருப்புகளை ஒட்டி ஒரு நீண்ட நடையை நானும் நோராவும் மேற்கொண்டோம். எங்களின் காதல் உறவின் பரிணாமத்தை நோராவிடம் தான் முதலில் சொன்னேன். மனதின் பாரம் விட்டு இலேசாகியது. அமைதியாக உணர்ந்தேன்.

பார்க்குமிடமெல்லாம் இரத்தக் கிளறியாக உள்ளது. மிகப் பயங்கரமான படுகொலைகள். அறமற்ற சூழல். எங்கும் கொலைத் தாண்டவங்கள். பரம்பொருளே, கடவுளே உன்னிடம் கோடி முறை தாழ்மையுடன் மண்டியிட்டுக் கேட்கிறேன், எங்களைக் காப்பாற்று. நான் கெஞ்சிப் பிரார்த்திக்கிறேன். நான் வாழ வேண்டும்! எனது வாழ்வு அனுபவம் மிகக் குறுகியது. நான் மரணிக்க விரும்பவில்லை. சாவைக் கண்டு அச்சமாக உள்ளது. இவையாவும் முட்டாள்தனமான அற்பமான முக்கியமற்ற சிறு விஷயங்கள். இன்று நான் அழுக்காக இருப்பதைப் பற்றிக் கவலையுறுகிறேன்; நாளை சிந்தனையற்ற நிலைக்குக் கூட நான் செல்லக்கூடும்.

சிந்தனை செய், நாளை என்பது நிச்சயம் அல்ல;

இரக்கமற்ற எஃகு உலோகத்தால் செய்யப்பட்ட வாள் நம்மைப் பிளக்கும்;

ஆனால் இன்று வாழ இன்னமும் சமயம் உள்ளது;

நாளை கதிரவ கிரகணம் கூட ஏற்படலாம்;

தோட்டாக்கள் அலறலுடன் அணுகி நம் நடைபாதைகளை விரிசலாக்கிக் கிழித்து குருதியால், அழக்குகளால், துர்நாற்றம் வீசும் கசடுகளால், நம்மைக் கழுவலாம்;

இன்று நீ உயிரோடு இருக்கிறாய்; பிழைத்துக் கிடக்க இன்னனும் நேரம் உளது;

நம் நேரம் நெருங்கும் போது, ஆவேசமான காட்டாற்று வெள்ளம் தாக்கும் போது மரணம் சம்பவிக்கும் சமயத்தில், நம் குருதியையும் சேர்த்து கலந்திடுவோம்;

கவனி, என் ஒவ்வொரு எலும்பும் நடுங்குகிறது;

உன் அருகாமைக்காக என் உடல் தடுமாறுகிறது;

இது ஒரு திணறூட்டும் விளையாட்டாக அமையலாம்;

எல்லா முத்தங்களும் எல்லையில்லா முடிவிலியை நோக்கிய பயணம் தான்.

ஜூன் 14, 1942 (பதிப்பகத்தார்)

நாஜிகளின் சட்டப்பூர்வ ரகசியக் காவலர்களான கெஸ்டபோ (Gestapo) ஃபுசெமிஷோள் நகரில் ஆயிரத்திற்கு மேற்பட்ட யூத ஆண்களை வளைத்து அவர்களை யனோவ்ஸ்கா (Janowska) உழைப்பாளர் முகாமிற்கு அனுப்பினர். கைதானவர்களின் குடும்பத்தினர் எண்ணற்றோரை முகவர்கள் (Agents) கொன்றனர்.

ஜூன் 19, 1942

கடவுள் ஸய்குஸைக் காத்தார். நான் தனியாகக் கிடந்தேன். இரவு முழுவதும் மக்களை அவர்கள் இழுத்துச் சென்று கொண்டிருந்தனர். 1260 பையன்களை வளைத்து விட்டனர். பாதிக்கப்பட்டவர்கள் பலராக இருந்தனர், தந்தைகள், அன்னைகள் சகோதரர்கள் என. எங்களின் அத்துமீறல்களை மன்னித்து விடு கடவுளே! எங்களைக் கவனித்துக் கொள்! இது அதிபயங்கரமான விவரிக்க இயலாத ஓர் இரவு. ஆனால் என் இனிய காதலன் என் அருகில் என்னுடன். நல்லது. நாங்கள் கட்டியணைத்து முடிவற்று முத்தமிட்டுக் கொண்டோம். துன்பத்தின் நடுவே இது மனதிற்கு உகந்த ஆறுதலாக அமைந்தது. துர்ப்பாக்கியமான இச்சூழலில் புளூஸும் கடவுளும் தான் காப்பாற்ற வேண்டும்.

ஜூன் 23, 1942

நேற்று எங்கள் குடியிருப்பில் ஒரு வகையான படுகொலை நிகழ்ந்தது. ஸய்குஸை அழைத்துக் கொண்டு இவ்வூரை விட்டுப் போய்விடுமாறு புளூஸ் கடிதம் எழுதியிருந்தாள். "அவனை அழைத்துக் கொண்டு" எனக் குறிப்பிட்டது தற்போது அபத்தமாக இருப்பினும் மகிழ்வூட்டியது! இன்றைய நாள்களில் அபத்தங்கள் தான் நிதர்சனம்.

ஜூன் 27, 1942

அமைதியான இனிய ஆசிர்வதிக்கப்பட்ட சனிக்கிழமையின் மாலைப் பொழுது. என் ஆன்மா அமைதி கண்டது. நான் அவனிடம் பதுங்கி விளையாடினேன். சிறு குழந்தையைப் போல என்னைக் கொஞ்சினான். தீயவற்றைப் பற்றிய பிரக்ஞை இல்லை. அவன் சென்றுவிட்டான். ஆயுள் முழுவதும் அவன் தோள் சாய்ந்துக் கிடப்பேன்.

ஜூன் 29, 1942

ஸய்குஸ் சிலசமயம் இனிமையாகப் பேசுவான், மற்ற சிலநேரம் கடுப்பேற்றவும் செய்வான். நான் மின்னும் கண்களுடன், உஷ்ணமான இதழ்களுடன் மற்றும் சிவந்த கன்னங்களுடன் அவனை ரசிப்பேன். எங்களைக் காப்பாற்று கடவுளே!

ஜூலை 1942 (பதிப்பகத்தார்)

கெஸ்டபோ யுடென்ராட் (Judenrat) என்னும் (யூதச் சபை-ஜெர்மன் நாஜிகளின் நிர்வாகம்) அமைப்பை ஃபுசெமிஷோள் நகரில் நிர்மாணித்தனர். இச்சபையில் யூதர்கள் பிரதிநிதிகளாக அமர்த்தப்பட்டு நாஜிகளுடன் பேரமோ அல்லது ஒப்பந்தமோ செய்வார்கள். இதன் காரணம் என்பது நாஜிகளின் ஆணையை ஃபுசெமிஷோள் நகர யூதச் சமூகத்தில் செயல்படுத்தத் தான். இச்சபையில் யூதர்களான மருத்துவர்கள், வக்கீல்கள், ரஃப்பிகள் (சமய குருமார்கள்) மற்றும் வியாபாரத் தலைவர்கள் போன்றோரும் அடங்குவர்.

ஜூலை 5, 1942

நாங்கள் பயந்தோம்; இறுதியாக அது நிகழ்ந்துவிட்டது. எங்கள் சேரியில் அறிவிப்புகளை வெளியிட்டனர். ஒருவேளை எங்களில் பாதி பேரைக் கடத்த அவர்கள் உத்தேசிக்கலாம். கடவுளே, கருணைக் காட்டு. என் சிந்தனைகளில் இருள் சூழ்கிறது, எதிர்மறையாக யோசித்தால் கூட அது பாவமாகும்.

இன்று மகிழ்வாகக் காட்சியளிக்கும் ஒரு தம்பதியைக் கண்டேன். அவர்கள் உலாவ வந்திருக்கிறார்கள். அவர்கள் கிளம்புகையில் மகிழ்ச்சியாக உல்லாசமாகத் தெரிந்தார்கள். என் இனிமைக்குரிய காதலனே இது போல நாமும் ஓர் இன்பப் பயணம் மேற்கொள்ள வேண்டும். அந்தப் பெண்மணியைப் போலவே நான் உன்னிடம் பேரன்பு வைத்துள்ளேன். உன்னை நன்றாகப் பேணுவேன். அந்தப்

பெண்மணியின் பொலிவான முகத்தில் மகிழ்ச்சி மட்டும் புலப்படுகிறது. வேறு எதுவும் அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. கடவுளே! ஒருவேளை உன் கருணையால், எங்கள் பிள்ளைகள், "நம் தாய் தந்தையர் யூதச் சேரியில் வாழ்ந்தார்கள்" எனச் சொல்லும் நாள் வரும். ஓ! எனக்குத் திண்ணமாக அதில் நம்பிக்கை உள்ளது.

ஜூலை 14, 1942 (பதிப்பகத்தார்)

ஃபுசெமிஷோள் நகரில் ஒரு தாழிடப்பட்ட யூதச் சேரியை வடிவமைத்தார்கள். அதில் 22000 திலிருந்து 24000 யூதர்களைத் திணித்தார்கள். யூதச் சபை உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மட்டும் தற்காலிகமாக சேரியின் வெளியில் உள்ள வீடுகளில் தங்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். யூதர்களுக்கு அடைக்கலம் அளிப்பவர்களுக்கு அல்லது உதவுபவர்களுக்கு மரண தண்டனை என அச்சுறுத்தல் தரப்பட்டது.

ஜூலை 15, 1942

இந்த நாளை நன்றாக நினைவில் வைத்துக்கொள். அடுத்து வரும் தலைமுறைகளுக்குப் பகிரவேண்டி வரும். இன்று காலை எட்டு மணி முதல் நாங்கள் சேரியில் தாழிடப்பட்டுள்ளோம். எனது தற்போதைய வாழ்வு இந்த அடைக்கப்பட்ட இடம் தான். உலகிலிருந்து விடுவிக்கப்பட்டோம். உலகமும் எங்களை விட்டு அகன்றது. பகல்கள் பயங்கரமாக உள்ளன. இரவுகளோ மோசம். ஒவ்வொரு நாளும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை கூடுகிறது. கடவுளே! உன்னுடைய பரிவுக்காக வழிபடுகிறேன். என் தாயைச் சந்தித்து முத்தமளிக்க வேண்டும்.

அருளாளனே, எங்களுக்கு மனவுறுதியும் வலிமையும் தா. எங்களை வாழ அனுமதி. நம்பிக்கை துரிதமாகத் தகர்கிறது. வீட்டின் முன்னே மலர்கள் மனம் வீசுகின்றன. யாருக்கு வேண்டும் இம்மலர்கள்?

என் காதலனை இன்று சற்றுத் தொலைவில் பார்த்தேன். ஆனால் அவன் எங்கள் வீட்டிற்கு வரவில்லை. கடவுளே! அவனது உயிர் நீங்காமல் பார்த்துக் கொள். என்னால் அவனை அரவணைக்க இயலாத சூழலை நினைத்துக் பார்க்கக் கலக்கமாக உள்ளது. அம்மாவை மனதில் நினைத்துக் கட்டியணைத்துக் கொள்கிறேன்.

ஜூலை 16, 1942

அடைக்கப்பட்ட சேரிகள் எவ்வாறு இருக்கும் என நீ அறிய ஆவலாய் இருக்கக்கூடும்; மிகவும் சுமாரானது தான்.எங்கள் வளாகத்தைச் சுற்றி மின் இணைப்பு உடைய கம்பிகள் தான். மேலும் காவலாளர்கள் கதவுகளைக் கண்காணித்துக் கொண்டு இருக்கின்றனர் (ஜெர்மானிய மற்றும் யூதக் காவலாளர்கள்).முறையான அனுமதிச் சீட்டு இன்றி சேரியை விட்டு வெளியேறினால் மரண தண்டனை நிச்சயம் உண்டு. உள்ளே அனைவரும் நம்மை சேர்ந்தவர்கள் தான்; நம் மனதிற்கு இனிய அன்பானவர்கள். சேரியைத் தாண்டினால் அன்னியர்கள் தான். என் ஆன்மா சோகத்தில் ஆழ்ந்துள்ளது; என் இதயம் பயத்தில் துவண்டுக் கிடக்கிறது.

இன்று என் காதலனைப் பிரிந்து வாடுகிறேன்; அவனைப் பற்றி எல்லா நேரமும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவனது அரவணைப்புக்காக ஏங்குகிறேன். அதன் வலியைப் பிறர் அறியார். மொத்தத்தில் எப்படி இருந்தாலும் நாங்கள் பயங்கரமான சூழலில் சிக்கித் தவிக்கிறோம்; எங்களுக்கு உதவி செய் கடவுளே மற்றும் அம்மா.

ஜூலை 18, 1942

மழையின் நீர்த்துளிகளைப் போல நாள்கள் ஒரே மாதிரி செல்கின்றன; மாலை நேரங்கள் மனதிற்கு உகந்ததாகப்படுகிறது. வீட்டின் முற்றத்தில் நாங்கள் அமர்ந்து கொண்டு உரையாடுகிறோம் சிரித்துக் கொள்கிறோம்; தோட்டத்தின் இனிமையான மணத்தையும் சுவாசிக்கிறோம். என் காதலன் எனக்கு அன்னியனாகிவிடுவானோ என்ற ஏக்கம் எனக்கு நிச்சயம் உள்ளது; அவனிடம் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் அமையவில்லை; எனக்குப் பல கவலைகள் உண்டு; நான் தனித்துவிடப்பட்டுள்ளேன். எனினும் இது போன்ற துயரங்களை மறப்பதற்கு ஏற்றவாறு என்னை மாலை வேளைகளில் சின்ன சின்ன செயல்களில் ஈடுபட்டுச் சமாளித்துக் கொள்கிறேன்.

ஜூலை 19, 1942

என் இனிய காதலன், என் பிரியத்திற்கு உரியவன் அவனை நினைக்கும்போதே எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இந்த சேரியிலும் எங்களின் தனி உலகம் நன்றாகவே உள்ளது. அதனால் இன்று நான் சற்று அமைதி இழக்காமல் இருக்கிறேன். எதைப் பற்றியும் நேர்மறையான சிந்தனையே மலர்கிறது. நாளை

நோராவிற்குப் பிறந்தநாள்! பூச்செண்டையோ தொகுப்பேடோ (ஆல்பம்) தருவதற்கு மேலாக அவளுக்கு மேம்பட்ட ஒரு பரிசை, பிறரால் தர இயலாத பரிசொன்றை நான் அளிக்க வேண்டும் என விரும்புகிறேன். இங்கிருந்து நீங்கிச் சென்றதும் அருமையான படமி (கேமரா) ஒன்றை அவளுக்கு வாங்கித் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தேன் மலையேற்றத்தின்போது நிச்சயமாக அவளுக்கு இது மகிழ்ச்சியைத் தரும். அவளைக் கண்டு நானும் அகமகிழ்வேன்.

ஜூலை 20, 1942 (பதிப்பகத்தார்)

ஜெர்மானியப் பட்டய அதிகாரிகள் 1.3 மில்லியன் ஸ்லாடி (போலந்தின் நாணயம், 1942ன் கணக்குப்படி தோராயமாக 2,50,000 அமெரிக்க டாலர்கள்) தொகையை ஃபுசெமிஷோள் யூத நகரவசிகளிடம் கோரினர். இந்தத் தொகையின் மூலம் அமைதி மற்றும் நிசப்தச் சூழலை ஏற்படுத்தித் தருவோம் என உத்தரவாதம் அளித்தனர்.

ஜூலை 22, 1942

மனவலியை மறப்பதற்கு நான் எழுதத்தான் வேண்டும். இது கடுமையான மற்றும் அதிபயங்கரமான சமயமாகப்படுகிறது. மீள்வோமா எனத் தெரியாது. நாளை என்பதே தூரத்தில் தெரியும் எதிர்காலமாகத்தான் எங்களுக்குத் தோன்றுகிறது. அது எவ்வாறு அமையும் எனச் சொல்ல முடியாது. இம்முறை குடும்பங்களை இழுத்துச் செல்வார்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். அம்மா அப்பாவிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லை என் காதலனிடமிருந்தும் கூடத்தான். கடுங்கோபத்தில் நான் இருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்ள மனம் மறுக்கிறது நஞ்ஞைக் கொப்பளிக்கும் பாம்பைப் போல் சிறுகிறேன்; என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறேன், கடினமாக உள்ளது. கண்களில் கண்ணீர் ததும்பினாலும் துக்க உணர்வும் ஆங்காரமும் என் விரல்களிலும் உடல் அசைவிலும் தெரிகிறது.

நுணுக்கமான விஷயங்களுக்கு நான் செல்ல வேண்டாம் எனப் பார்க்கிறேன்; அவ்வாறு எழுதத் தொடங்கினால் நான் கூக்குரல் இடுவது போலத் தோன்றும். எதற்கும் அர்த்தம் இல்லை எதுவும் மாறப்போவதில்லை. கசப்புணர்வும் காதலில் கையறுநிலையும் தான் எனக்கு ஏற்பட்டுவிட்டது. நான் இவற்றை நினைக்கையில் எனக்குச் சீற்றம் உண்டாகிறது. அவனை இனிமேல் சந்திக்கக் கூடாது. இவ்வளவு பார்த்தாகிவிட்டது. போதும், என் கண்களையும் கைகளையும் செவிகளையும் நான் மூடிக் கொள்கிறேன். உண்டான

துயரங்களைக்கொண்டு மேலும் துயரங்களை உருவாக்கி என்னை நானே பாழாக்கிக்கொள்வது மேல்.

கனவுலகில் நான் முற்றிலும் வேறாக உணர்கிறேன். என் கனவுகள் இனிமையானவை. எனக்கு உதவி செய் புளூஸ் மற்றும் கடவுளே.

ஜூலை 24, 1942 (பதிப்பகத்தார்)

யூதச் சேரிவாசிகள் நாடு கடத்தப்படுவதைத் தவிர்க்க அதிகபட்சமாக 5000 யூதர்களுக்கு வேலை அனுமதிச் சீட்டில் (அட்டையில்) முத்திரை அளித்திட யூதச் சபைக்கு உரிமை வழங்கப்பட்டது.

ஜூலை 25, 1942

யூதக் காவலர்கள் நேற்று இரவு வருகை தந்தனர். எங்களால் மொத்தத் தொகையையும் தர முடியவில்லை. ஓ! வானிலிருந்து மழை பொழிவதைப் போல ஏன் பணமழை கொட்டக் கூடாது? இது மக்களின் வாழ்க்கை அல்லவா? இதை விட மோசமான தருணம் உண்டா எனத் தெரியவில்லை.

எவ்வளவு அதிபயங்கரமான சூழல் என உனக்குப் புரியாது அம்மா. ஆனால் கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். படு பயங்கரமான சூழலில் நான் இருந்தாலும் கடவுள் மேல் எனக்கு நம்பிக்கை உள்ளது.

இளங்காலையில் ஒளிமயமான, இருளை அழிக்கும் கதிர்களைக் காண்பதைப் போல அம்மாவின் மடல் புகைப்படத்துடன் என்னைத் தேடி வந்ததால் எனக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. அந்தப் புகைப்படத்தில் அம்மா என்னைப் பார்த்துச் சிரிக்கும் போது கடவுளுக்கு என் மேல் நிச்சயமாகப் பரிவு உள்ளது என எண்ணினேன். வாழ்வின் இருண்ட சூழலிலும் நாம் புன்முறுவல் பூப்பதற்கு ஏதோ ஒன்று இருக்கத்தான் செய்கிறது; அன்னையே எங்களுக்காக பிரார்த்தனைச் செய்; நான் உனக்கு முத்தங்களை அனுப்புகிறேன். எனக்கு உதவி செய். அன்னை மற்றும் கடவுளின் அருள் வேண்டும்.

மாலையில்!

என் மனதிற்கினிய நாட்குறிப்பே! துரதிருஷ்டவசமான தருணங்களில் நாம் இத்தனை நாட்கள் இணைந்திருந்தோம். தற்போது இன்னமும் கேடுகெட்ட நிலையில் உனக்கு எழுதுகிறேன்.

நான் அச்சமடைய வேண்டிய நிலையில் உள்ளேன். ஆயினும் எச்சூழலிலும் என்னை விட்டு அகலாதவர் இன்று எனக்கு உதவக்கூடும். அவர் என்னைக் காப்பார். ஓ இஸ்ரேல்!கேட்பாயாக! எங்களைக் காப்பாற்று, உதவி செய். குண்டுகள், கையெறி குண்டுகள் மற்றும் தோட்டாக்களிலிருந்து என்னை நீ காத்ததை நான் நினைவு கூறுகிறேன். நான் பிழைத்துக் கிடக்க உதவிபுரி. அன்னையே! நீயும் எனக்காகப் பிரார்த்தனைச் செய். நற்சிந்தையுடன் எங்களை மனதில் நிறுத்து அம்மா! இம்முறை களம் மிக ஆபத்தாகத் தென்படுகிறது. நான் உன்னை மனதாரப் போற்றி நேசிக்கிறேன். நாம் மீண்டும் இணைவோம். கடவுளே, என் பாட்டி, தாத்தா, அரியானா மற்றும் என் காதலனைக் காப்பாற்று. இறைவனே, என்னை உன் கைகளுக்குள் ஒப்படைக்கிறேன். உன் உதவியை நாடுகிறேன், புளூஸ் மற்றும் பரம்பொருள்.

(போலாந்து நாளிதழ்):



1939 முதல் 1942 கோடை வரை கிட்டத்தட்ட 700 பக்க நாட்குறிப்பில் ரெனியா ஸ்பீகளின், வாழ்க்கை குறித்த ஆற்றல் மிகு உளப்பார்வையை நாம் அறிகிறோம். அவளது பதினெட்டாம் பிறந்தநாள் நிறைவடைந்த ஒரு மாதத்தில் அவள் இப்பூவுலகை விட்டு நீங்கியது துயரமானது.

ஸய்க்மண்ட் (ஸய்குஸ்) குறிப்புகள்:

ஜூலை 27, 1942 (பதிப்பகத்தார்)

ஃபுசெமிஷோளில் ராணுவ அதிகாரியான ஆல்பர்ட் பாஃட்டெல், யாவரும் திகைக்கும் வகையில் திடீரென யூதர்கள் நாடு கடத்தப்படுவதைக் கண்டு தம் சக நாஜிகளையே எதிர்த்தார். ராணுவ பாரவண்டிகளில் குறைந்தது 100 யூதர்களையாவது அவரவர் குடும்பத்தினருடன் ஏற்றிக் கொண்டு, பெல்ஸெக் (Belzec) மரண முகாமிற்கு அவர்களைக் கடத்தவிடாமல் காத்தார்.

ஜூலை 27, 1942

எல்லாம் முடிந்துவிட்டது. உன் பக்கங்களைப் புரட்டுவதற்கு என்னை மன்னித்துக் கொள் நாள்குறிப்பே! என் காதலி இயற்றிய குறிப்புகளை மேலும் தொடர எனக்குத் தகுதி இல்லை தான். உனக்கு ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். ரெனுஷ்காவிற்கு வேலை அனுமதி முத்திரை கிட்டவில்லை; அதனால் நாடு கடத்தப்படுவதிலிருந்து தப்பிக்க அவள் மறைவிடத்தில் ஒளிந்து கொண்டாள். என் பெற்றோருக்கும் வேலை அனுமதி முத்திரை கிடைக்கவில்லை. என்னைப் படைத்த ஆண்டவன் மீது நான் சபதம் செய்கிறேன், என் உயிரைக் கொடுத்தாவது என் பெற்றோரையும் என் காதலியையும் நான் காப்பாற்றுவேன். எனக்கு அருள் செய் கடவுளே!

ஜூலை 28, 1942

நகரத்தின் எல்லையை அடைந்தது என் பெற்றோரின் நல்லூழ். ஒரு கல்லறையை அவர்கள் மறைவிடமாகத் தேர்ந்தெடுத்து இருந்தனர். ரெனியா தொழிற்சாலையில் இருந்து வெளியேற வேண்டி இருந்தது. அவளுக்கான மறைவிடத்தை நான் எவ்விலைக் கொடுத்தாவது கண்டறிய வேண்டும். இரவு எட்டு மணி வரை நகரத்தில் தான் இருந்தேன்; முடிவில் வெற்றி கிட்டியது.

ஜூலை 29, 1942

கெஸ்டபோவிற்கும் ராணுவத்திற்கும் பூசல் ஏற்பட்டதால் அவர்கள் எதிர்பார்த்த அளவிற்கு பெரு அளவிலான நாடு கடத்தல் திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை. என்னால் கடந்த மூன்று நாட்களாக நிகழ்ந்தவற்றை விளாவாரியாக விவரிக்க இயலாது. நகரில் 12 மணி நேர ஓயாத அலைச்சலில் உழன்றிருந்த எனக்கு, தற்போது ஆற்றல் இல்லை. இந்த துர்ப்பாக்கியமான சம்பவங்கள் என்னை மிகவும் அலைக்கழிக்கின்றன; ஆனாலும் நான் நம்பிக்கை ஒளியை இழக்கவில்லை. கடினமான வேலையில் ஈடுபட்டுள்ளேன்; நான் பல பேரைக் காப்பாற்ற வேண்டும், என்னைக் காத்துக் கொள்ளமுடியுமா என்று கூட நிச்சயமாகத் தெரியவில்லை. எல்லாப் பொறுப்பும் பாரமும் என் தோள்களின் மேல். அரியானாவை மற்றொரு புறத்திற்கு அழைத்து வந்துவிட்டேன்.

ஜூலை 30, 1942

எதுவாக இருப்பினும் இன்று தெரிந்துவிடும். மன உறுதியுடனும் உடலுறுதியுடனும் நான் என் லட்சியத்தை அடைவேன் அல்லது முயன்று மரிப்பேன்.

ஐந்து மணி

முத்திரையிடுவதற்காக எங்கள் சீட்டுகளை மதியம் அவர்கள் பிடுங்கிக் கொண்டனர் (மனைவியரின் சீட்டுகளுடன்). என் ஆவணத்தைப் பணயம் வைக்க முடிவு செய்து எப்படியாவது ரெனுஸ்காவைக் காப்பாற்ற வேண்டும் என எண்ணினேன். ஆனால் அதிர்ஷ்டம் இல்லை! என்னை கெஸ்டபோவிடம் (நாஜிகளின் ரகசிய காவல்துறை) கொண்டு செல்வதாக அச்சுறுத்தினர். நீண்ட நேரம் அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடினேன். பிறகு போனால் போகட்டும் என என்னை விட்டார்கள். ஆனால் ராணுவ குடியிருப்பை மேற்பார்வையிடும் என் வேலை இந்த மோசடியால் பறிபோய்விட்டது. எட்டு மணிக்குத் தான் தெரியும் நான் இங்கு தங்குவேனா இல்லையா என்று.

இரவில்

ஓ! கடவுள்களே! மோசம் போனோமே! என்னை வெறுமை சூழ்ந்தது. இந்த நாடக ஒத்திகை ஒரு மணி நேரம் நடந்தது. என்னுடைய சீட்டை (அட்டையை) என்னால் பெற முடியவில்லை. என்னை நானே கொன்றழித்துக் கொண்டேனா? தற்போது அடையாள உரிமைச் சீட்டை இழந்தவனாகிவிட்டேன். எனக்கு என்ன நேரும்?

ரெனியாவையும் பெற்றோரையும் காக்கும் பொருட்டு நான் வகையாகச் சிக்கிக் கொண்டேன். என் கதை இங்கு முடிந்துவிடும் எனத் தோன்றுகிறது.

இன்னமும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

ஜூலை 31, 1942

மூன்று குண்டுகள்! மூன்று உயிர்களும் பிரிந்துவிட்டன! நேற்று இரவு 10:30 மணிக்கு இது நடந்தேறியது. நான் நேசிப்பவர்களை விதி எடுத்துக் கொண்டது. என் வாழ்க்கை முடிந்துவிட்டது. குண்டுகளின் சத்தம் மட்டும்தான் எனக்குக் கேட்கிறது என் இனியவளே ரெனுஷ்கா, உன் நாள்குறிப்பின் இறுதி அத்தியாயம் நிறைவு பெற்றது.